# திராவிட நாடு

0—7—58 | வார வெளியீடு | விலை 16 காசு


## நேற்று-இன்று-நாளை

[ எம். கே. சீனிவாசன் ]

தென்னைக்கு நீரூற்றி வயிரம் பாய்ச்சித்
திண்ணியதாய் வளர்க்கின்றான் ஒருவன்; ஆனால்
பொன்னுருகும் கடுவெயிலில் இளநீருண்டு
பூரிக்க இன்னொருவன் இருக்கின்றானே!
'என்ன இது; இதுதானா வாழ்க்கை?' என்று
இந்நாட்டின் இருள்மாய்ப்பார் எவருமில்லை!
பின்னர்வரும் சமுதாய மாந்தரெல்லாம்
பித்தரெனத் தூற்றிநம்மைப் பேசிடாரோ?

பனிமலரைத் தீப்பந்தம் அழிப்பதேபோல்
பழந்தமிழர் திருநிலத்தைப் பாழ்படுத்தி,
'இனியிவர்கள் தலையெடுக்க வேண்டாம்' என்ற
எண்ணத்தால் சதிகள் பல நடத்துகின்றார்;
தினையளவும் ஆதரவு காட்டிடாமல்
தேம்புகின்ற தமிழினத்தின் எலும்பின்மேலே
பனையளவில், விண்ணிடிக்கும் உயரந்தன்னில்
பளிங்குநிலை மாடங்கள் எழுப்புகின்றார்!

ஒவ்வாத உரையொன்றை வடக்குமாந்தர்
உரைத்திட்டார் என்றவுரை கேட்டபோதே
செவ்வானம் போல்விழியில் சிவப்பை யேற்றிச்
சீரியநம் மூதாதை வரலாறெல்லாம்
எவ்வாறோ மறந்துவிட்டோம் என்றபோதும்
இன்றேனும் ஒன்றாகி இணைந்துவிட்டால்
சவ்வாதுத் தமிழ்நிலத்தில் நம்மையெதிர்க்கும்
சதிகளெலாம் பிதிபடவே நடப்போம் நாளை!

# கேட்டீரா! சேதி!

துப்பாக்கியால் சுட்டாலும், தடியால் தாக்கினுலும், கண்ணீர்ப் புகைகளை விட்டாலும் உடனே ஒரு காரணம் தருவார்கள் — "சட்டம், அமைதியைப் பாதுகாப்பதற்காக," இவை தேவைப்பட்டன என்று!! சட்டம் அமைதி ஆகியவைபற்றி அறியாமல், அத்துமீறிக் கலவரம் செய்பவர்கள் என்று, ஏழைத் தொழிலாளர்களையும், பொதுமக்களையும் குற்றம் சொல்வது எளிது. ஆனுல், இதே குற்றத்தைச்சுமத்தி, இந்தக்கிழமை இரண்டு தடவை கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கிறது,காங்கிரஸ்அரசு! வடக்கேயுள்ள ஜயப்பூரிலிருந்த உயர்நீதி மன்றத்தை ஒழித்துவிட்டதைக் கண்டித்து, கிளர்ச்சி செய்து வருகிருர்கள், வழக்கறிஞர்கள். அவர்கள் மீதுதான், 'சட்டம், அமைதிக்காக,' சர்க்கார் கண்ணீர்க் குண்டுகளைப் போட்டிருக்கிறது!! வடாற்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டையில், தோல் பதனிடும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகிருர்கள். அவர்களுக்கும் இங்குள்ள காங்கிரஸ் அரசு இந்தக்கிழமை பிரம்படிகொடுத்ததாகச் செய்திகள் வருகின்றன!! இப்படி, உரிமைக்குரல் எழுப்புவோரை ஒடுக்குவதில், ஒன்றையொன்று மிஞ்சுவதாகவே உள்ளன, இந்திய உபகண்டத்தில் வாழும் காங்கிரஸ் அரசுகள்.

*

ஐதராபாதத்தில் கடந்த சில தினங்களாக, சென்னை—மைசூர் —கேரளா — ஆந்திரா முதலிய அரசுகள் கலந்துகொண்ட தெற்குவட்டார மாநாடொன்று நடந்தது. நீர்ப்பாசன முன்னேற்றம் பற்றித் தீவிரமாக ஆலோசித்த இம்மாநாட்டில், "சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முதலிடம் தரவேண்டும்," என்று முடிவு கட்டியிருக்கிருர்கள். டில்லி மந்திரி ஜெயின், மாநாட்டுக்குத்தலைமை வகித்தாராம். இப்படி, சிறிய நீர்ப்பாசனங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம்தான், உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியுமாம்! வடக்கே கோடி கோடியாகச் செலவிட்டு, நீர்ப்பாசனத் திட்டங்களைப் போட்ட பிறகே இந்த யோசனை மனதில் தென்பட்டது போலும்!! சிறிய நீர்ப்பாசனங்கள் என்ருல், கால்வாய் அமைத்தல், வாய்க்கால் தோண்டுதல், குளம் குட்டைகளைச் செப்பனிடுதல் உள்பட, யாவும் அடங்கும். இந்தக் காரியங்களைத்தான் இப்போதே ஆங்காங்குள்ள கிராமத்தார் செய்துகொள்கிருர்களே, இதற்கென்ன பெரிய மாநாடு என்று நீங்கள் கேட்கலாம்! என் செய்வது!!

*

சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை வைப்பது சம்பந்தமாக வெளிநாடு சென்றிருந்த தொழிலமைச்சர் ஆர். வெங்கட்டராமன், பிரான்சிலுள்ள ஒரு கம்பெனியிடம் பேசினராம். அவர்களும், சம்மதம் தந்துள்ளனர், "ஆனுல்... இந்திய சர்க்கார் இணங்குவதையொட்டி மேற்கொண்டு கவனிக்கப்படவேண்டும்," என்று ஆர். வி. பேசியுள்ளார்! தென்னகம் தொழில் வளம் பெறவேண்டுமென்பதில் தோழர் வெங்கட்டராமன் கொண்டுள்ள அக்கறையை எவரும் பாராட்டவே செய்வர். அக்கரையிருப்பினும், டில்லிக்குத் தூக்கவேண்டியிருக்கிறதே, காவடி! இதே வெங்கட்ராமிடம் நினைத்ததைச் செய்யும் அதிகாரமிருப்பின், அவரது திறனும் செயல்வன்மையும் பெற்று எவ்வளவு பயன்பட முடியும் தென்னகம் என்பதை நினைக்கும்போதுதான் ஏக்கமும் துக்கமும் வருகிறது, நமக்கு!!

*

திரைப்படத் தொழிலிலும் "வடக்கு-தெற்கு" காட்டப்படுவதாகச் சொல்கிருர் வாகினி அதிபர் தோழர் நாகிரெட்டி! உண்மையில், கச்சா பிலிம் நெருக்கடியால், தென்னிந்திய திரைப்படத் தொழில், அல்லாடும் கட்டத்துக்கு வந்துள்ளது- "ஐயகோ, என் செய்வோம்?", என்று இலட்சக்கணக்கான ரூபாய்களைக்கொட்டி இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் கலங்குகின்றனர்!! இங்கிலையில், அமெரிக்கக் கம்பெனியான **கோடாக்**, டில்லி சர்க்காரிடம் ஒரு திட்டம் சமர்ப்பித்துள்ளதாம், இங்கேயே வேண்டிய கச்சா பிலிமைத் தயாரிக்கலாம் என்று. இதற்கு 50 கோடி ரூபா மூலதனமாகுமாம். வேண்டிய இயந்திரங்களையும், தொழில் நுணுக்கங்களையும் தான் தருவதாகவும், இந்திய சர்க்காருடன் சேர்ந்து இதைச் செய்வதாகவும், இக்கம்பெனி முன் வந்திருக்கிறது. ஒரு ஆண்டுக்கு சுமார் 5 கோடி ரூபாய்க்கு வெளிநாட்டிலிருந்து கச்சா பிலிமை இறக்குமதி செய்கிறது, இந்தியா! 50 கோடி மூலதனம் போட்டால், பத்து ஆண்டுக்குள் பெற்றுவிட முடியும், என்கிற நம்பிக்கை இருக்கிறது. செய்யுமா, டில்லி? — என்று அச்சப்படுகிருேம்! ஏனெனில் இப்படியொரு கச்சா பிலிம்சாலை ஏற்படுத்துவதென்ருல், அதற்கான இடம், தெற்கேயுள்ள நீலகிரிதான் என்று, முன்புதேர்ந்தெடுத்திருக்கிருர்கள். இளகுமா, டில்லியின் மனம்!!

# 17-ம் ஆண்டு பிறந்தது!

7] ஆண்டு சந்தா ரூ. 8 [20-7-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 1

திராவிடநாடு, ஆண்டு 17-க்குள் அடியெடுத்து வக்கிறது.

காகித விலையேற்றம்! கவலைகள் தேக்கம்!! — ரண்டுக்குமிடையேதான், ஏடு எடுத்தடி வைக் றது.

ஆண்டுத் துவக்கத்தின்போது, கொண்டிருந்த ஆசைகள் பல! அனைத்தினையும், செய்துதரவில் யே, என்கிற ஏக்கம் வாசகர்களிடம் உண்டு; முடிய ல்லையே எனும் சோகம் நம்மிடத்திலும் இருக் றது.

கழகத்தின் பணி பல துறைகளில் இப்போது ளர்ந்துவிட்டது. ஓய்விலாது, ஒவ்வொரு ஊருக் ம் செல்லவேண்டும் — இயலாமையைச் சொன் லோ, ஏற்கும் நிலையில் தோழர்கள் இல்லை—இத த்துக்குள் ஒவ்வொரு ஊரினையும் அங்கு கழகம் ளர்ந்திருக்கும் பாங்கினையும் அறியும் ஆவல் ததும் கிறது—எனவே, அப்பணி, வாரத்தில் பல நாட் ளைக் கொண்டுபோய்விடுகிறது! ஆங்கில ஏடு, ஹோம்லண்ட்" கழகக் கொள்கைகளைச் செல்லாத டங்களுக்கெல்லாம் எடுத்துச் செல்கிறது; இலட் யத்துக்கு நல்லதொரு விளக்க ஏடாகமிளிர்கிறது. னவே அந்தப் பணியையும் சென்னையிலிருந்து சய்ய நேருகிறது! இடையில், சட்டசபைப் பணி வறு!!

இப்படிப்பட்ட, ஓய்விலாத நிலையில், பொறுப் னைப் பங்குபோட்டுக்கொண்டு பலர் ஆற்றினால் ான் இயலும் என்கிற அளவில், இருப்பதை அறிய டியாதவர்களல்ல தோழர்கள். எனவே, துவக் த்தில் சொன்ன ஆசைகளை நிறைவேற்றவில்லையே ன்று வருந்தமாட்டார்கள் — மன்னிப்புக் கிடைக் ும் என்று மனதார நம்புகிறோம்.

வாசகர்களைப்போல, நமக்கும், ஏராளமான தக ல்களை, கதைகளாகவும் கட்டுரைகளாகவும் வடித் த்தர வேண்டுமெனும் ஆவல் இல்லாமலில்லை! நரம் வேண்டுமே!! பாதி நாட்களைப் பயணத்திலும், ய்ந்த நேரத்தை வேறுபல இயக்கப் பணிகளி ும் பயன்படுத்த வேண்டிய நிலை, நாள்தோறும், ளர்கிறது. கழகத்தின் அளவையும், அதுதரும் வலைகளையும் கவனிக்கும்போது, இந்நிலை குறையும் ன்கிற அறிகுறியில்லை. மாறாத ஆசையும், குறை ாத ஊக்கமும் உள்ளத்தில் ததும்புகிறது எனி ும், வாய்ப்பில்லை! ஓய்வுமில்லை!! இருப்பினும், புத் தாண்டில், அடிக்கடி தொடர்பு வைத்துக்கொள்ளும் கட்டுரைகளும் கதைகளும், தர, நிச்சயம் முயற்சிப் போம் என்று உறுதி தருகிறோம்.

கடந்த பதினாறு ஆண்டுகளில், இப்போது முடிந்த ஆண்டு, குறிப்பிடத்தக்க ஒரு புதுமையை— அல்ல — ஒரு புரட்சியை உண்டாக்கியிருக்கிறது. நமது இயக்கக் கொள்கைகளின் அடிப்படை உண்மை பேச்சளவில் மட்டும் இல்லை; எழுத்து வடிவத்திலும் நடைமுறையில் உண்டு என்று "திராவிடநாடு" தனது செயல் முறையால் காட்டியுள்ளது. அதாவது பல இளம் எழுத்தாளர்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்தும் ஒரு நல்ல வாய்ப்பைத் "திராவிடநாடு" உண்டாக்கியதன் வாயிலாக நாட்டின் கருத்துச் செல்வம் படைத்த பல இளம் எழுத்தாளர்களை—குடத்திலிட்ட விளக்கு—குன்றில் ஏற்றிய பேரொளியென எல்லோரும் அறியவும் பாராட்டவுமான நிலை ஏற்பட்டது உண்மையிலேயே கழகக் கொள்கைகளை அரண் செய்யும் ஒரு நல்ல வாய்ப்பென்றே கருதுகிறோம். பேச்சிலே ஜனநாயகமும் செயலிலே சர்வாதிகாரமும் தோன்ற அரசியலரங்கிலே உலவுவோருக்கு இது ஒரு எச்சரிக்கையும் விழிப்பும் தருவதாக அமைய வேண்டுமென்று விரும்புகிறோம்.

'திராவிடநாடு' நீண்ட காலமாக, குறைபட்டு வந்தது, நல்ல எழுத்தாளர்கள் புதிது புதிதாக இல்லையே, என்று. எழுத்துத் துறையில் ஈடுபாடு கொள்ள விரும்பும் தோழர்களும், தங்களுக்கு 'திராவிடநாடு' இடம் தருவதில்லை என்று குறைபட்டதுண்டு. இக்குறை, சில காலமாக, குறைந்து வருகிறது! மணக்கும் தமிழில், கொள்கை சிறக்கும் விதத்தில், கருத்துக்களைத் தேடித்தரும் சிந்தனையாளர்கள், அறிவியக்கத்தில் பரவி வருகிறார்கள். இந்த வளர்ச்சி, வெகு வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் ஒரு தேசிய இயக்கத்துக்கு, மிகமிகத் தேவையாகும். எனவேதான், திராவிடநாடு, பல எழுத்தாளத் தோழர்களை அறிமுகம் செய்விக்கவும், அவர்தம் எழுத்துக்களுக்கு ஆக்கம் அளிக்கவும் முன்வந்திருக்கிறது. இந்த நல்வாய்ப்பை, தாயகத்து சிந்தனையாளர்கள் பயன்படுத்திக்கொள்வார்களெனக் கருதுகிறோம்! புதிது புதிதான, கருத்தாழம் நிரம்பிய, தமிழ் மணக்கும் கட்டுரைகளுக்கும்; கொள்கை விளக்கம் மிளிரும் கவிதைகளுக்கும்; சிந்தனையைத் தூண்டும் சிறு கதைகளுக்கும்; சுவை நிரம்பிடும் தொடர் சித்திரங்களுக்கும், 'திராவிட

நாடு' இடம் தரும்—பயன்படுத்திட வருக, எனப் புது எழுத்தாளர்களை அழைக்கிறோம்.

கொள்கை விளக்க ஏடுகளின் முதல் நோக்கம் வாணிபமாக இருக்க முடியாது. வாணிபமே முக்கியமெனின், வண்ணம் கலக்கலாம், வாசகர்களின் மனவுணர்ச்சியைத் தூண்டும் கதைகளை நிரப்பலாம், யாரையும் நோகாதவைகளை ஆங்காங்கும் தெளிக்கலாம்; ஆங்காங்கும் ஓடி விளம்பரங்களைப்போட்டு 'பெட்டி'யை நிரப்பலாம். ஆனால், 'திராவிட நாடு' அரும்பியதே, கொள்கை விளக்கத்துக்கு! ஒரு பக்கம் இடைப்பினும், அதன்மூலம் கொள்கை விளக்கம் நாலாமே எனும் குறிக்கோள்தான், நமக்கு முதலில் வருகிறது!! இதனால், 'கணக்குப் புத்தகம்', அடிக்கடி எச்சரிக்கை செய்யும் கட்டம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. எனினும், என் செய்வது? கொள்கையை விற்று, குவித்திடும் ஆசை கொண்டோரல்லவே நம்மவர்கள்!!

வழக்கமாக, 'திராவிட நாடு,' ஒவ்வோராண்டும், தன்னை நிமிர்த்திக்கொள்ளப் போராடிய வண்ணமே உள்ளது. இந்தப் போராட்டம், திராவிடம் பெறும் வரையிலும், நிற்காது என்றே எண்ணுகிறோம்! ஆனால், திராவிடம் பிரியும் நாள் வரையில், தன்னாலான பணியைச் செய்துகொண்டு, அந்த விடுதலை விழாவில் கலந்துகொள்ளும் பேறுபெற, "உயிர்" இருக்கவேண்டுமல்லவா? அந்த உயிருக்கும், ஆபத்து வந்துவிடுமோ என்று காகிதத்தின் அகவிலையேற்றம், அச்சமூட்டுகிறது. போர்க்காலம்கூடத் தேவலாம் போலிருக்கிறது! இப்போதுள்ள நெருக்கடி மிகமிகப் பெரிது—ஒன்றுக்கு மூன்றாக விற்கிறது, விலை! அப்படிக் கொடுத்தாலும், கிடைக்கிற காகிதம், ஏட்டின் அழகையே அழித்துவிடும் போலிருக்கிறது!

நெருக்கடிகளும், "ஏன் வாழவேண்டும்?" என்ற விரக்தியும், தோன்றினாலும், ஏழை, போராடிக்கொண்டுதானே இருக்கவேண்டியிருக்கிறது. அதிலும் கொள்கை ஆர்வமிக்க ஏழையின் இடத்திலே உள்ள திராவிட நாடு, தன்னால் நாட்டில் ஏற்பட்டுள்ள 'தம்பி'களைப் பெருமிதமாகப் பார்க்கிறது; தமிழ்த் துறையில், தான் செய்த பணியால் கிடைத்துள்ள மறுமலர்ச்சியைக் காணுகிறது; இந்தத் தொண்டினைத் தொடர்ந்து செய்யவேண்டும் என்கிற ஆசையையும் ஆர்வத்தையும், இன்னும் அதிகமாகப் பெறுகிறது. இதனைச் சரிவர, நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு, வாசகர்களிடம் இருக்கிறது—திராவிட நாடு படிப்போரின் தொகை, முன்பைவிட அதிகமுள்ளது. 'எதிர்பார்ப்பது இல்லை,' எனும் அதிருப்தியிருப்பினும் கூட, விடுதலைப் போரின் பல்வேறு பணிகளிலே ஈடுபட்டிருக்கும் நமக்கு உற்சாக மூட்டவும், தவறவில்லை வாசகர்கள். அவர்களுக்கெல்லாம் வாராவாரம் ஏடுகளைக் கொண்டு போய்க் கொடுக்கும், ஏஜண்டுத் தோழர்களும், திராவிட நாட்டைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் கடமையைச் செய்யத் தவறவில்லை. ஒரு சில ஏஜண்டுகள், நமக்கு நெருங்கியவர்கள் என்பதாலும், நெருங்கியவர்களை நெருக்கும் சுபாவம் நமக்கில்லை என்பதைப் புரிந்துகொண்டவர்கள் என்பதாலும், சாதித்துவரும் 'மௌனம்' அறிவோம்! இந்த மௌனம், நல்லதல்ல; நாட்டுப் பணியில் ஈடுபாடு கொண்டிருக்கும் ஏட்டுக்குச் செய்திடும் நன்மையுமல்ல என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறோம்!!

ஒருசிலரைத் தவிர்த்து, ஏனையோரெல்லாம், வழக்கம்போல், அன்புகாட்டி வருகிறார்கள். நமக்குள்ள சிரமங்களை உணர்ந்து, நம்முடன் ஒத்துழைக்கும், இத்தகைய அன்புருவங்கொண்ட ஆதரவாளர்களுக்கும், நம்முடனேயே கலந்துவிட்ட வாசக சகோதரர்களுக்கும், கட்டுரைகள், கவிதைகள் தந்துதவும் எழுத்தாளர்களுக்கும் நமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அவர்களும், நாமும், மகிழும் வகையில், விடுதலை விழா விரைவில் வரும்படியான ஒரு நாள் பூக்காமற் போகாது! அதுவரையில், ஏற்படும் சகலவிதமான இன்பதுன்பங்களையும் பகிர்ந்துகொள்ள, இந்நாட்டிலுள்ள கழகத்தவர்களைத் தவிர யாரிருக்கிறார்கள் நமக்கு!!

"குடும்பத்தோரே !
உங்கள், ஏடு, திராவிட நாடு."

என்று சொல்லி, அனைவருக்கும், நமது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம். வருக, திராவிட நாடு! வளர்க, நம் கொள்கைகள்!!

★

கேரள கம்யூனிஸ்ட் சர்க்கார், கேரளாவில் ஒரு ரயான் தொழிற்சாலை ஆரம்பிப்பது சம்பந்தமாக பிர்லாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பது தெரிந்ததே.

குறிப்பாகத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட ஷரத்திலும் அமைதியை நிலவச்செய்ய உத்தரவாதம் அளிக்கும் ஷரத்து தலைமைக்கு கட்டோடு பிடிக்கவில்லையாம்.

*

காங்கிரஸ் ஆட்சியினர் தனிப்பட்ட முதலாளிகளால் நடத்தும் கம்பெனிகளில் சர்க்கார் பணத்தை முதலீடு செய்வதை கம்யூனிஸ்டு கட்சியினர் பலமாக எதிர்த்து வருகிறார்கள் அல்லவா?

ஆனால் அதே முறை கேரளாவிலும் கையாளப்படுகிறது. தனிப்பட்ட முதலாளிகளால் நடத்தப்படும் கேரள நீர்ப் போக்குவரத்து கார்ப்பரேஷன் என்ற ஸ்தாபனத்திற்கு சர்க்கார் 18 லட்சம் ரூபாய் முதலீடு செய்திருக்கிறது.

இந்தக் கம்பெனியைத் தேசியமயமாக்குவதாக முன்னர் தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தார்கள். ஆனால் அந்தக் கம்பெனியைத் தேசிய மயமாக்காததோடு மட்டுமல்லாமல், சர்க்கார் பணத்தை 18 லட்சம் ரூபாயை முதலீடு செய்துமிருக்கிறார்கள்.

இது முதலில் பட்ஜெட்டில்கூட அங்கீகாரம் பெறவில்லை! இப்போது அதனை உபமான்யக்கோரிக்கையாக சட்ட சபையில் கொண்டு வந்தார்கள்.

"சமுதாயம்"

# நிழலில் நின்று....

மா. கி. தசரதன்

இலங்கையிலே தமிழர்கள் அடைந்த அல்லலினை அளவிட்டு உரைக்க இயலாது. சிங்களவெறியர்கள் தமிழர்களைக் குறிவைத்துத் தாக்கினார்கள். இரத்தம் பெருகி ஓடியது என்று சொல்லும் விதத்தில் அங்கே அமளியும் அக்ரமமும் நடைபெற்றன. இந்தச் சோக நிகழ்ச்சிகளைக் கேட்டவர்களின் மனம் நொந்து புண்பட்டது; இரக்கம் மிகுந்தவர்களின் கண்கள் குளமாயின; பழந்தமிழ்ப் பண்பும் மரபும் உணர்ந்தவர்கள் பெருமூச்செறிந்தனர்; ஆத்திரப்பட்டனர். ஏதும் செய்பவில்லையே இங்குள்ள அரசினர் என வருந்தினர். மக்கள் இந்தக் காலத்திலே அவ்வளவுதான் செய்ய முடியும்; செய்ய அவ்வளவுதான் இடமும் இருக்கிறது.

அரசுக்கட்டிலுக்குப் பாரம் ஆகி இருப்பவர்கள் உள்ளத்திலே உணர்ச்சி — நாட்டுணர்ச்சி — இருந்தால் இந்த அக்கிரமங்கள் ஏன் — என்று கேட்பர், என்ன செய்தால் இந்த இன்னல் தீரும் என்று வழிவகை காண முயன்றிருப்பர். ஆற்றலும் அதிகாரமும் இருந்தால் அக்கிரமங்களைத் தடுக்க இலங்கைக்கு வேண்டுகோள் — விட்டிருப்பர். ஆனால் இன்று சென்னைக் கோட்டையிலே கொலு இருப்பவர்கள். அமைச்சர்கள் எனற பெயர் பூண்டிருக்கின்றனரேயன்றி, பெயருக்கு ஏற்ற அதிகாரம் பெற்றிருக்கின்றார்களா எனில், இல்லை என்பதை அவர்களே பலமுறை ஒப்புக்கொண்டிருக்கின்றனர். எங்கோ நெடுந்தொலைவிலே இருப்பவர்களிடம் இங்குள்ளவர்களின் வாழ்க்கை ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் இடும் கட்டளைகளை ஏற்றுநடக்கச் சொல்லும் ஆணையைச் செயல்படுத்த--அவர்கள் புகழ்பாடி ஆனந்தப்பட இங்கே சிலர் அமைச்சர்கள் என்று பெயர்—அல்ல, பட்டம் பெற்றுத் திரிகின்றனர். அவர்கள் தமிழர்கள் தான், தமிழ்மொழி கற்றவர்கள் தான். இலக்கியச் சுவை உணர்ந்தவர்கள் தான். பழைய மரபு தெரிந்த பண்பாளர்கள் தான். இத்தனை சிறப்புடைய அவர்களுக்குத் தலைமை பூண்டிருப்பவரும் தமிழர் தான்-தமிழர் மட்டும் அல்ல—அவர் ஒரு பச்சைத் தமிழர்!

தமிழ்நாட்டில் தமிழன் ஆட்சி நடக்கிறது — பச்சைத் தமிழர் தலைமையிலே நடக்கிறது. ஆனாலும்,

இலங்கையிலே தமிழர்கள்
ஐயோ என அலறுகின்றனர்.

அந்த அலறல் ஒலி வெளிவரு முன்னே அவர்கள் உடலிலே இருந்து—பகைவர் வெட்டிய புண்ணிலேயிருந்து பச்சை இரத்தம் குபுகுபுவெனப் பாய்ந்து மண்ணை ஈரமாக்குகின்றது. தமிழ் மகன் மானத்தைக் காப்பதில் பெயர் பெற்றவன். அந்த மானம் அங்கே விலைபேசப்படவில்லை — பறிக்கப்படுகின்றது. பாழாகின்றது. இங்கிருக்கும் தமிழ் அரசு அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஆம். பார்த்துக்கொண்டுதான் இருக்கிறதே ஒழிய, பார்த்த காட்சி மனதிலே வேதனையை உண்டாக்கவில்லை; அதனாலே புதைத்து எழ இயலவில்லை. பகைத்து எழுந்து தமிழன் தன் மானம் காத்தான் எனக் கதை கதையாக இலக்கியம் சொல்லுகின்றது. இன்று பகைத்து எழாதது இருக்கட்டும், பதைத்து எழுந்து ஒரு அநுதாபம் சொல்லவும் தமிழரின் அரசுக்கு மனம் இருந்தும் வாய்ப்பு இல்லை, அதனாலே வாளா பார்த்துக்கொண்டிருக்கிறது!

ஆடும் ஆட்டத்தைப் பார்த்திருப்பதைப்போல, தொலைவிலே நிகழும் தொடர்பில்லா நிகழ்ச்சியைப் பார்த்திருப்பதைப் போல, இலங்கையிலே நடக்கும் அநீதிகளை இங்கே இருக்கும் அரசு பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஆனாலும் இவர்கள் தமிழர்கள் தான்! இவர்கள், தலைவர் ஒரு 'பச்சைத்' தமிழர்தான்! என்றாலும் இவர்களால் பார்த்திருக்கத்தான் முடிகின்றது.

ஏன்?

ஏன் இந்நிலை? இதற்கு விடை கண்டால் தென்னாட்டு அரசியலில், புதிய விழிப்பு உண்டாகும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கும் அந்தத் தெளிவு பிற அரசியல் கட்சிகளுக்கும் வர வேண்டுமானாலும், அவை ஏன்? என்று கண்டுபிடித்தாக வேண்டும்.

இங்கே இருக்கும் அமைச்சர்கள், அதிகாரம் அற்ற பிரதிநிதிகள்--டெல்லியிலே இருக்கும் முழு முதல் பொருள் இட்ட கட்டளைக்கு தலைவணங்கித் தீரவேண்டியவர்கள்.

பொம்மைகளை ஆட்டி வேடிக்கைகாட்டும் ஒரு கலை இருக்கிறது. அந்தக் கலையாட்டத்திலே மனிதனைப் போன்ற, மற்ற விலங்குகளைப் போன்ற பொம்மைகள்

ஆடும்; கையையும் காலையும் ஆட்டும், தூக்கும். ஆனால் அவை தாமாக ஆடாமல், ஆட்டுவிக்கிற வித்தைக்காரன் கையும் காலும் தூக்கத் தூக்கும், அவ்வளவே. அதே போலத்தான் டெல்லியிலே இருக்கும் எசமானர்கள்கையைத் தூக்க இவர்களும் கையைத் தூக்குவார்கள், அவர்கள் சொல்லிக்கொடுத்ததை இவர்களும் சொல்லுவார்கள்.

மனிதனைப் போன்ற பொம்மை ஆடுகிறது, மந்திரிகளைப் போன்ற இவர்களும் ஆளுகின்றார்கள்.

அதனால்தான் இலங்கையில் 'ஓ' எனத் தமிழன் கதறும் ஓலம் இவர்கள் காதுகளில் கேட்டும், கேளாதவர்களாய், அவர்கள் அடையும் அல்லலைக் கண்டும் காணாதவர்களாய், மனம் இருந்தும் ஆற்றல் இல்லாதவர்களாய் கையிழந்து நிற்கின்றனர்.

அதிகாரம் இருக்கும் அந்த இடத்தினர் இதிலே அக்கறை காட்டுகின்றனரா என்று அடுத்துப் பார்க்கவேண்டும். ஏனெனில் எதுவும் செய்யவேண்டியவர்கள் அவர்கள் ஆனதினால், அவர்களிடம் 'என்ன வழி?' என்று கேட்க வேண்டும்.

அவர்களுடைய தலைவர்—பிரதமர்—ஜவகர்லால் நேரு பண்டிதர் அவர்கள் இதுபற்றித் தனது கருத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டார்.

நேரு பண்டிதர் பண்பட்ட இதயம் படைத்தவர், அந்த இதயத்திலே இரக்க குணம் மிகுதி, பிறர் துயர்கண்டு மனம் வருந்தும் பெற்றியினர் என்றெல்லாம் அவர் புகழைச் சிலர் பாடுகின்றனர். பஞ்ச சீலத்தைப் பாருக்கு அறிவித்தவர், அது பரவவேண்டுமென்பதிலே மிக்க அக்கறை கொண்டவர் என்றெல்லாம் கூறுகின்றனர்.

இலங்கையிலே தமிழர்கள்,
தாக்கப்பட்டார்கள்!
அடிக்கப்பட்டனர்!
இரத்தம் வெள்ளமாகியது!!

இத்தனையும் கேட்ட பின்னர் இரக்கமிக்க அவருடைய உள்ளத்திலே வேதனை பிறக்கும் என்று எதிர்பார்த்தோம்; நம்பினோம். ஆனால் அவரோ கண்களை இறுக மூடிக்கொண்டு நான் அந்தக் காட்சியைக் காணமாட்டேன் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். ஏன் என்றார்கள் சிருபர்கள். 'ஏனா?' அது அவர்கள் உள்நாட்டு விவகாரம், அதிலே நான் தலையிட மாட்டேன் என்று கூறிவிட்டார்.

இலங்கையிலே தமிர்கள் வெட்டப்படுவது உள்நாட்டு விவகாரம் என இங்கே பிரதமர் சொல்லுகின்றார். அதிலே தலையிடமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கின்றார். நான் எப்படி அதைக் கேட்பேன் என்று நிருபர்கள் வாயிலாக நம்மை — தமிழ் மக்களைக் கேட்கின்றார்.

ஆனால் பேசவேண்டியவர் அவர்தான். பேசவேண்டிய அதிகாரம் இருப்பதும் அவரிடம்தான். ஆனால் அவர் 'மாட்டேன்' என்று மறுக்கின்றார்.

தமிழர்கள் கதி என்னதான் ஆவது?

அதனால்தான் நாம் நமது பிரச்சினைகளை நாமே பார்த்துக்கொள்ளுவோம்; அதற்கான அதிகாரங்களைப் பெறுவோம். அதற்கு நமக்கு என்று ஒரு அரசு வேண்டும் என்று கூறிவருகின்றோம். நமக்கு என்று ஒரு அரசு, அதிகாரம் இருக்கும் அரசு, மனிதனைப் போன்ற பொம்மை இல்லாமல், மனிதனே தோன்றும் நாடகத்தைப் போல அமைச்சர்களைப் போன்றவர்கள் ஆளாமல் அமைச்சர்களே ஆண்டால், இலங்கைத் தமிழரின் இன்னல்மட்டும் அல்ல, இங்குள்ள தமிழரின் இடுக்கண் இல்லாமை, இன்னல் இத்தனையும் போக வழிகாண மனம் இருக்கும். மனம் இருந்தால் மார்க்கம் எளிதிலே புலனாகும்.

இதை நாம் வலியுறுத்திக் கூறினால் நேரு எவ்வளவு நல்லவர் தெரியுமா--அவர்கீழே நாம் இருப்பது இன்னும் சிறந்தது-தெரிந்துகொள்ளுங்கள் எனக் கூறுகின்றனர்.

நல்லவரான நேருவே நம் மக்கள் படும் துயரம் துடைக்கமாட்டேன் என்னும்போது பிறர்பற்றிப் பேசவும் வேண்டுமோ?

உள்நாட்டு விவகாரம் அதனால் பேசமாட்டேன் என்னும் நேரு பண்டிதர், பிற உள்நாட்டு விவகாரங்களைப் பேசாமல் இருக்கிறாரா என்று பார்த்தால், அங்கெல்லாம் அழைக்காமலே நுழைகின்றார்.

இம்ரே நாகி படுகொலை — உள்நாட்டு விவகாரம்; என்றாலும் — என்று சொல்லிவிட்டு அதற்கு அநுதாபம் தெரிவிக்கின்றார். பஞ்சசீலத்தைப் பேசுகின்றவர்கள் செய்கின்ற செயலா இது எனப் பதறித் துடிக்கின்றார். உள்நாட்டு விவகாரம் ஏன் அதைப் பற்றிப் பேசுகின்றீர்கள் என்று யாராவது கேட்டால், உடனே அது உள்நாட்டு விவகாரம்மட்டும் அல்ல, உலக விவகாரம்—அதனால் பேசுகின்றேன் என்று சொல்லக் கூடும். உள்நாட்டு விவகாரம் உலக விவகாரமாக எப்போது மாறும்? அந்த நாடு தனி உரிமை படைத்த நாடாகயிருந்தால், அது உலக விவகாரமாக மாறும். இன்று தமிழ்நாடு தனி உரிமை நாடாக இருந்தால், தமிழர்கள் இலங்கையிலே படும் அல்லல், வெறும் உள்நாட்டு விவகாரம் என்ற போர்வையால் மூடப்படாமல், உலக விவகாரம் என்று அறிவிக்கப்பட்டு உண்மை தெளியப்பட்டு, நீதி கிடைத்திட வழி பிறந்திருக்கும்.

அந்த நிலை இல்லாமல், தமிழ் மண் வேற்றவர் ஆட்சியில் சிக்கிச் சீரழிகின்ற காரணத்தினால் தமிழன் தவிப்பு, தமிழன் அழுகை, தமிழன் இன்னல்—இவைகளையும் போக்க இயலாமல், இமை மூடிக்கிடப்போரும், மூடிய இமைகளை நீக்கிவரும் நீரைத் துடைத்துத் தேம்புவோரும், எழுந்திடும் மூச்சினை அடக்கப் பயின்றிடுவோருமாகத் தமிழர்கள் வதைபடுகின்றனர்.

நாகியின் மரணம் நெஞ்சைத் தொடுகின்றது! ஆனால் தமிழரின் இரத்தம் மனதிலே இடம் பெற முடியவில்லை. இத்தனைக்கும் நேரு பண்டிதர் மிக நல்லவர்! மிக நல்லவர் ஆட்சியில் இது நிலைமை என்றால் மற்றவர்கள் ஆட்சியில்...

நல்ல பிள்ளையே கூரைமேல் கொள்ளிக்கட்டையுடன் உலவினால், மற்றவர்கள் என்ன செய்ய மாட்டார்கள்?

இலங்கைத் தமிழரின் இன்னல் கண்ட இப்போதேனும் இந்த உண்மையினை உணர்ந்து திருந்தினால்தான், இனியேனும் தமிழன் இங்கேனும் வாழமுடியும்.

இதனை அமைச்சர்கள் மட்டும் அல்ல, தமிழ்நாட்டின் நலனில் அக்கறைகொண்டவர்கள் அத்தனை பேரும் உணர்ந்தால் வாழ்வு.

உணர்த்தும் பணியினை நாம் செய்கின்றோம், செய்வோம். உணராதவர்கள் உணரட்டும்.

இலங்கைத் தமிழனே உன்நிலை அதற்கு வாய்ப்பளிக்கட்டும்!

வடிக்கும் கண்ணீர், சிந்தும் இரத்தம், படும் துயரம், செய்யும் தியாகம், இழக்கும் உயிர் இதற்காவது பயனபடுகின்றது — அந்த நிலைக்குத் தாயகம்—நீ போற்றும் தமிழ்நாடு-தாழ்ந்திருக்கின்றது. தாழ்ந்திருக்கும் தமிழகம் உனக்கு வாழ்வளிக்கவில்லை; ஒரு கவளம் சோறும் ஒரு விழுங்கு நீரும் தேடிக்கொண்டு வளம்மிக்க இந்தத் தமிழகத்தைவிட்டு, கடல் தாண்டிப்போய் கண் கலங்கும் நீ உன்னை வாழவைக்காத தமிழ் நாட்டிற்கு வாழ்வளிக்க இந்த அளவு உதவி செய்கின்றாய். அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்றாற்போல், நீ தமிழகத்திற்கு அன்போடு இந்தப் பாடம் புகட்டுகின்றாய். ஆனால், கண்படைத்தும் காணும் ஆற்றல் படைக்காதவர்களாய், காது படைத்தும் கேட்க ஆற்றல் படைக்காதவர்களாய், நெஞ்சம் இருந்தும் அதிலே நேர்மையான எண்ணங்களை எண்ண இயலாதவர்களாய், இங்கே சில தமிழர்கள் — அவர்களிடம்தான் இப்போது அதிகாரம்—உன்னையும், உன்னுடைய பொன் நாட்டையும் காக்கும் அதிகாரம் கிடக்கிறது—இருக்கின்றார்கள்.

அவர்கள் தமிழர்கள் என்பதோடு 'இந்தியர்'களாகவும் இருந்திடுகின்றனர். இந்தியர்களுக்கு இதிலே தொடர்பு இல்லை என இந்தியர்களின் பிரதமர் பண்டித நேரு கூறிவிட்டார். அதனால் இனி இந்தத் தமிழ்— இந்தியர்களும் அதையேதான் சொல்லிடுவர்.

தமிழன் என்ற பெயரை மறந்தால் என்ன கேடு வருகின்றது என்பதனை இந்த நிகழ்ச்சி காட்டுகின்றது.

நேரு தமிழர் அல்லர்;

இந்தியர்.

ஆனால் இலங்கையிலே அவதிப்படுவோர் இந்தியர் அல்லர்;

தமிழர்.

அதனாலே நேருவின் பார்வை அவர்கள் மீது படவில்லை.

ஆனால் 'பச்சைத் தமிழர்' பார்வையும் இலங்கைத் தமிழர் மீது படவில்லை. 'பச்சைத் தமிழர்' பச்சைத் தமிழராக மட்டும் இல்லாமல் இந்தியராகவும் இருக்கின்றார். அதனாலே அவர் நேருவின் நிழலிலே நிற்கின்றார். நிழலிலே எத்தனை காலம் நிற்க முடியும்? ஆதவன் கீழ்த்திசையில், மேற்றிசையில் இருக்கும்போது நிழல் நீண்டிருக்கும். அப்போது அதிலே நின்று இளைப்பாற ஆசை பிறக்கும். ஆதவன் அடிவானம் விட்டு எழுந்தால் நீண்ட நிழலுக்கே நிற்க இடம் கிடைக்காது. அதனாலே அதன் கீழ் நின்று இளைப்பாற ஆசை இருந்தாலும் இயலாதுபோகும்.

மக்கள் மனதிலே தெளிவு என்ற ஆதவன் எழ எழ நேருவின் நிழல் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும்; அப்போது அதன் கீழே நின்று பதவி என்ற இளைப்பாறுதல் பெற பச்சைத் தமிழருக்கு இயலாதுபோகும். அந்த நாள் வரும்வரை காத்திருந்து ஏமாறாமல், இப்போதே உண்மை உணர்ந்து, நிலையற்ற நிழலிலே நின்று இளைப்பாறாமல் 'குந்தக் குடிசை' ஒன்று சொந்தத்தில் அமைத்துக்கொள்ளவேண்டுகின்றோம், பச்சைத் தமிழரை. சொந்தக் குடிசைதான், நமக்கென ஒரு ஆட்சி, அரசு—அதுவே தன்னாட்சி பெற்ற தமிழகம் — திராவிடம்—தென்னகம். ✻

# தூத்துக்குடி அழைக்கிறது!

பொதுச்செயலாளர் அழைப்பு விடுத்திருக்கிறார் கழகச் சார்பில், தேர்தலுக்காகச் சென்றிருக்கும் **கருணாநிதியும், மதியழகனும், முத்துவும்** திராவிடத்தை அழைக்கிறார்கள்.

சென்ற தேர்தலில் கொஞ்ச ஓட்டுகளால் எம். எல். ஏ. ஆக இயலாமற்போன எம். எஸ். சிவசாமி எல்லோரையும் அழைக்கிறார்.

வேடிக்கை காண அல்ல! வேலை செய்யும் பாங்கைக் காண அல்ல!!—தூத்துக்குடி என்றாலே, தமிழகத்திலுள்ளோர் அறிவர்—மறைந்த மாவீரன் சாமியையும், அவர் போன்றாரின் உழைப்பு எப்படிப் பட்டதாக இருக்கும் என்பதையும்.

நடைபெறும் துணைத் தேர்தலில், தி.மு.க, தன் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஊரிலிருக்கும், கிளைக் கழகங்களும்-ஒவ்வொரு கழகத் தோழரும் தத்தமது உதவியை **உடனே, இன்றே** அனுப்பியுதவ வேண்டும்-என்பதற்குத்தான், அழைப்பு விடுகிறார்கள்!! பொற்குவை தருவோர் நம்மிடம் இல்லை-நோட்டு நோட்டாக அளிக்கும் "டாடா பிர்லாக்களை" அறியோம் நாம்—காசுகள் தரக் கூடியவர்களேயிருக்கிறார்கள்! அப்படிப்பட்டவர்கள் கையில் கிடைத்ததை ஒன்றோ இரண்டோ ஆயினும் உடனடியாக "பொதுச் செயலாளர்-அறிவகம் சென்னை" எனுமுகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அழைக்கிறோம்!!

சுழலும் பம்பரங்கள், தூக்கமறியாத் தொண்டர்கள்-வாக்காளர்களுக்கு விளக்கம் தந்து, தவறாது அவர்களை 'உதய சூரியனு'க்கு வாக்களிக்கச் செய்யும் முயற்சியுடையோர்-நெல்லையில் ஏராளம் உண்டு. அவர்களுக்குத் தெம்பும் ஊக்கமும் அளிக்கும் வகையில், ஒவ்வொரு கழகத் தோழரும், இயன்றதை அளிக்க வேண்டுமென விரும்புகிறோம்.

காலத்திற் செய்த உதவி, சாலப் பெரிது:
கவனியுங்கள்! காசுகளை அனுப்புங்கள்!!

# வெட்கம்தான் வருகிறது

—[கா. வேழவேந்தன்]—

என்னை தாயின்வயிற்றிலிருந்து ஏந்திக் கொண்ட நாடு; நான் தவழ்ந்துவிளையாடியநாடு; என்னை அணு அணுவாக வளர்த்து ஆளாக்கிய நாடு; மங்காத அன்புடன் என்னைத் தன் மார்பிலே தாங்கி நிற்கும் அன்னைத் திருநாடு; அந்த நாடுதான் உலகிலேயே முதன் முதல் தோன்றிய 'தொன்மை மிகு நாடு!' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

வஞ்சம் கொஞ்சமும் இல்லாத பெருநிலம்; வளமெலாம் ஒருங்கே பெற்றுவிட்ட வற்றாத பூமி; நெல் விதைத்தால் பொன்னையே விளைவிக்கும் செல்வம் கொழிக்கும் திருமண், இங்கே விளையாதது எங்குமே விளைவதில்லை என்று போற்றப்படும்பூமி; அதுதான் அன்னை நாட்டின் 'வளமார்ந்த நிலம்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு, கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

வற்றாத வளம்படைத்த பெருமலைகள், வாசமிக்க பொருள்களை வாரிவழங்கும் மாமலைகள், தேயிலை வேண்டுமா, காப்பி வேண்டுமா என்று தினம்தினம்கேட்டு அள்ளிக் கொடுக்கும் அருமைமிகு நீள்மலைகள்; பத்துமாதம் சுமந்து பெற்றெடுக்கும் அன்னையைப்போல, ஆறுகளை ஈன்றெடுத்த அழகுத் திருமலைகள்: அவைதாம் எம் தாய் திருநாட்டில் மண்டிக்கிடக்கும் 'செழிப்புடை மலைகள்' என்கிறார்கள், தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்.

நெளிந்து வளைந்து ஓடும் நீண்ட ஆறுகள்; நித்த நித்தம் இந்த நாட்டை எழில் குலுங்கச் செய்ய, ஓயாமல் ஓடிவரும் பாட்டாளி நதிகள், உழவையும் ஏனைய எழில்மிக்க தொழில்களையும் வாழவைக்கும் ஒப்பற்ற சக்திபடைத்த ஆறுகள்; பூநாறும்நீரால் எங்கள் தென்னாட்டைப் பொன்னாடாகச் செய்யவந்த பொலிவுமிக்க நதிகள், இவைதாம் எம் மண்மாதாவின் இரத்த நாளங்களாகப் பின்னிக் கிடக்கும் 'சீரார்ந்த ஆறுகள்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

அலைக்கரம் உயர்த்தி என்றென்றும் பணிபுரியக் காத்துக் கிடக்கும் கடல்கள், என் அன்னை மண்ணை அணி செய்ய, நீல ஆடையாய் வாய்த்த நெடிய கடல்கள்; அழகுமிகும் ஆணி முத்துக்கள் வேண்டுமா, என்று ஓசை எழுப்பி கேட்டுக் கொண்டிருக்கும் ஆழமுடைக் கடல்கள்: அற்புதமான எழில் அமைந்த கரைகளால் வளம் சேர்க்க வந்திருக்கும் அருமைமிகு ஆழிகள்; இவைதாம் என் தாய்த்திரு நாட்டைச் சுற்றி அணிவகுத்துக் கிடக்கின்றன என்கிறார்கள், தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

வந்தாரைவாஎன்று அழைக்கத் தெரிந்த மக்கள்; இனி வருவாரை எதிர்நோக்கிக் கண்பூக்கும் மக்கள்; மானமொன்றே வாழ்வுக்கு மணம் சேர்ப்பது என்ற உண்மையைச் சொந்தமாக்கிக் கொண்ட மக்கள்; நேர்மைக்கும் நீதிக்கும் மட்டுமே அஞ்சிவாழும் மக்கள்; தங்களுக்குப் பின்னால் மறைக்கமுடியாத வரலாற்றைப் பெற்றிருக்கும் மக்கள்; எங்கள் சிங்காரத் தாயகமாம் தென்னாட்டுக்குரிய மக்கள்; அந்த எந்நாட்டு மக்கள்தான் வையகத்திலேயே 'முன்தோன்றிய மூத்த குடியினர்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!

கற்புக்குப் புதுப்பொருள்கண்ட கன்னியர்கள்; கவிஞர்களின் உள்ளங்களை உருகவைத்து, தமக்கென்றே காவியங்களை ஆக்கிக் கொண்ட மங்கையர்குல திலகங்கள்; விருந்தோம்பி இல்வாழ உலகுக்குக் கற்றுக் கொடுத்த பெண்மணிகள்; சமுதாய வாழ்வில் என்றோ சமநிலை பெற்றுவிட்ட தாயகத்துப் பெண்டிர்; அவர்கள் தாம் எந்நாட்டிலும் காண இயலாத எம்நாட்டு 'பெண் அரசிகள்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

ஆயுளையே கணிக்க இயலாத அரியமொழி; அமுதுக்கும் தேனுக்கும் உவமை கூறியும், அவையெல்லாம் மனநிறைவு தராமல் அறிஞர்கள் வேறு உவமை தேடிக்கொண்டிருக்கும் அரியமொழி; தொட்டாரை எல்லாம் தன்பக்கம் இழுத்துக்கொள்ளும் சுந்தரமொழி; அந்த எங்கள் செந்தமிழ் மொழிதான் 'தனித்தியங்கும் மொழி' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

வாழ்வுக்கு ஒளிசேர்க்கும் வளமார்ந்த அருங்கலைகள்; நுண்ணிய தன்மைகளால் நுகர்ந்தோரை மதுவுண்ட வண்டாக்கும் பெருங் கலைகள்; ஏற்றமும் தோற்றமும் பெற்றதால் யார் யாரோ அழிக்க முனைந்தாலும் அழியாத நற்கலைகள்; கலப்பாலும் கொடியோர் வீசிய கணைகளாலும் நிலைகுலையாத கவின் கலைகள்; அவைதாம் என் தந்தையர் நாட்டுக்கே உரிய 'நுட்பம் நிறை கலைகள்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

உலகம் நினைத்துப் பார்க்கு முன்பே உருவான இலக்கணம்; வாழ்வுக்கும் செயல்களுக்கும் வரைமுறைகூறும் வளம் செறிந்த இலக்கணம்; காதலின் வகைகளை எல்லாம் கவின்படக் கூறிச் செல்லும் இலக்கணம்; மாத்தமிழரின் அறவாழ்விற்கும்,மறவாழ்விற்கும் பொருள்கூறும் இலக்கணம்; நாம் படிப்பதற்கு இன்று கிடைக்கும் முதல் இலக்கியமான இலக்கணம்; அதுதான் என் வெற்றித் திருநாடு பெற்றெடுத்த 'தொல் இலக்கணம்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!

நானிலத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்த நாகரிகம்; நலியா வளம்படைத்த வரலாற்றுப் பின்னணிகொண்ட நாகரிகம்

(10-ம் பக்கம் பார்க்க)

# கோவை மாநாடு

மாமலைகளும், அங்கே விண்ணை யளாந்திடும் மரங்களும், அந்த மரங்களிலே தாவிப் படரும் கொடிகளிலே பூத்த மலர்களும், அம்மலர்களிலிருந்து வீசும் நறுமணமும் சூழ்ந்த பூநாடு என்பர்! அல்ல அல்ல, தேனாடு எனவும் சொல்லலாம்-ஏனெனில், 'கொங்கு' என்பதற்கு தேனென்றும் பொருள் உண்டு என விளக்கமுரைப்போரும் உண்டு!! பூமணமும், தேன் சுவையும் நிரம்பியதுமட்டுமல்ல, இது வள்ளல் நாடு-எப்படித் தெரியுமோ? எமது பகுதியில் சிறுமி போல ஓடும் காவிரியால்தான், கழனிகள் குலுங்கும் திருச்சியும் தஞ்சையும் புனிதமடைகிறது! அம்மட்டோ, ஆங்காங்குள்ள சின்னஞ்சிறு மலைகளிலிருந்து வழிந்தோடும் நீரால் வளமபெறும் இடங்கள் பல, பட்டியல் வேண்டுமா, என்று புகழ் பாடுவோரும் உண்டு. கொடைக்குக் குமணன் என்கிறீர்களே, அக்குமணன் இருந்தது எங்கு தெரியுமோ? எமது மண்ணில்தான்! பதினெண் சித்தர்களில் பலருக்கு உறைவிடம் இதுதான்! பாரியை யொத்தோர் வாழ்ந்தது இங்குதான்! வணங்காமுடி வாணராயர் எனும் பெயர் தெரியுமோ? தன்னெதிரே வந்து நிற்கும் புலவர்கள், தமது வறுமையைச் சொல்லி யாசிக்கும்போது அவர் தம் உடல் குறுகும் அந்த வேதனையான காட்சியைக்காணவே விரும்பாமல் வந்து கேட்டோருக்கு வரையாது அளிக்கும்படி வாயில் காப்போனுக்கு உத்தரவிட்டு வாழ்ந்த குறுநில பூபதிகள் பலர் இருந்த தாக்கும் எமது கொங்கு பூமி என்பார்கள்!!

பழம் பெருமையும், இயற்கை வளமும் எப்படியிருப்பினும் கொங்கு நாட்டின் பெரும் பகுதியாக விளங்கும் கோவை மாவட்டம், 'அன்பு' ததும்பும் மாவட்டம் எனலாம்! அவர்கள்பேசிடும்மொழியிலே, யாழோசையுண்டு—அவர் தம் மூச்சிலே வாளுண்டு—அவர்களைப்பார்த்திடும்போது, அவர்தம் திண் தோளும், கம்பீரமும் மூவேந்தர்களை நினைவூட்டும்—உழைத்து வாழ்பவர்கள்—ஒருவரையும் வஞ்சிக்க நினையாதவர்கள்—உள்ளப் பாங்கு உணர்ந்தவர்கள்—இத்தனைக்கும் மேலாக, எடுத்த காரியத்தை பொறுமையோடு முடித்துக் காட்டும், செயற் காளைகள்!!

ஓராயிரமல்ல, ஈராயிரமல்ல, இலட்சக் கணக்கிலே, கழகத்தின் பக்கம் இதுபோன்ற காளைகள் இருக்கின்றனர், அப்படிப்பட்ட 'சம்பத்தை' கழகம் பெற்றிருக்கிறது எனும் மாட்சியினை எடுத்துரைக்கும வகையில், காட்சியாக அமைந்திருந்தது கடந்த 5,6 தேதிகளில கோபியிலே நடைபெற்ற, கோவைமாவட்ட மாநாடு.

குறுநில மன்னர்களும், பழைய கோட்டையினர் எனக் கூறிப் பெருமை கொள்வோரும், வாணிப் வேந்தரும், ஆலையரசுகளும், அதிகாரத்திலமர்ந்துள்ள கட்சியை நாடும் அவசியத்துக்கு ஆட்பட்டோரும், நிரம்பியமாவட்டம் அது. நிதி சேர்க்கும் நிலை ஏற்படின், பறந்து சென்று பணம் பெற்று வரும் காங்கிரஸ்! அப்படிப்பட்ட இடம் அது!!

ஆனால், அங்கு மாநாடு நடத்திய தி. மு. கழகத்துக்கும் சீமான்களுக்கும்தான் 'சேலம்' நடந்தாகி விட்டதே. எனவே அவர்தம் ஆறுதலையோ, பணப்பையையோ நம்பி ஆங்கு காரியம் ஆற்றப்படவில்லை. கழகங்கள் செலுத்திய காணிக்கை! கட்டணப் பேச்சு வைத்துப் பெற்ற காசு! — இவைகளைக்கொண்டு, மாநாட்டினைக் கூட்டி, மகத்தான கொள்கை விளக்கங்களை மக்களுக்கு அளித்து, மகிழ்ச்சியுறும்படியான மீதத்தையும் அளித்திருக்கிறார்கள், கோவை மாவட்டக் கழகத்தினர்.

செலவுபோக 22,222—00 ரூபாய் மிச்சப்பட்டிருக்கிறது.

வரவேற்புக் கழகத் தலைவர் உடுமலை ப. நாராயணன், செயலாளர்கள் ஈரோடு எஸ். அப்பாவு, பி. ஏ. சாமிநாதன், தொண்டர்படைத் தலைவர்கள் கே. எஸ். சிங்காராயர், ஜி. கே. பழநிசாமி, விளம்பரப் பொறுப்பாளர் ஜி. ஏ. வெங்கடாசலம், முதலியோரும், அவர்களுக்கு உறுதுணையிருந்து காரியமாற்றிய நூற்றுக்கணக்கானவர்களும்; அவர்களுக்கும் நாட்டுக்கும் இடைத்துள்ள "சம்பத்தும்" என்னென்ன பாடுபட்டிருக்க வேண்டும் என்பதை அழகுற அமைத்திருந்த அர்ச்சுனன் பந்தல் சொல்லிற்று'நாகம்மையாரினநினைவைக் கிளறும் வகையில், அமைந்திருந்த அரங்கு, இயக்கத்தின் ஆரம்ப காலத்தையும், இடையிலேற்பட்ட பெருங்குழறலையும், அக்குழறலைத் தாண்டி கொள்கை வளர்க்க வளர்ந்துவரும் தொண்டர்களையும், அடிக்கடி நினைவூட்டிக்கொண்டிருந்தது!

தலைமைவகித்தார், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. துவக்கி வைத்தார் தோழர் தர்மலிங்கம் எம்.பி; இருவரது எழுச்சி மிக்க உரையையும், நாவலரின் விளக்கத்தையும், ஏனைய இயக்க வீரர்களின் குரலையும், மக்கள் கேட்டு மகிழ்ந்தனர். மாநாட்டின் குறிப்பிடத்தக்க சிறப்பு, இப்படி ஒரு இயக்கம் வளர்ந்திருக்கிறதே எனும் எண்ணம் கிளர்ந்தெழ மராட்டிய நண்பர் பாவாசாகிப், மகாதவுன்கர் எனும் பார்லிமெண்டு உறுப்பினர் அமர்ந்திருந்ததும், நம்மை அறிந்துகொண்டதுமாகும்!!

கூடுகின்றனர் இலட்சக்கணக்கில் —ஒருமாவட்டத்தை மிஞ்சும் அளவில் இன்னொரு மாவட்டம் இருக்கிறது—எப்போதும் கேட்கின்ற கொள்கை விளக்கத்தைத்தான் கேட்கின்றனர் மக்கள்—மாதத்துக்கு ஒரு மாவட்ட மாநாடு நடக்கிறது—ஒவ்வொன்றும்ஒவ்வொரு 'ஆவடி' போலக்காட்சியளிக்கிறது—ஊர்வலம் நடத்துகிறார்கள், அந்த ஊர்வலத்தைக்கூடக்கருத்து விளக்கம் தரும் கவினுறு ரதங்கள்

செல்லும் வகையில் செய்கிருர்கள்—எப்படி வளர்கிருர்கள்! என்ன செய்யலாம் நாம்!—என்கிற அச்சம், காங்கிரஸ் தலைவர்களுக்கு, அதிகமாகிவருவதை நாடு அறிந்து வருகிறது. ஒரு மாவட்டத்தில் மாநாடு முடிந்ததென்ருல், அமைச்சர் குழாம் உடனே அங்கே 'டேரா' அடித்து, மிச்சமீதியிருப்போரும் கழகத்தின்பால் சென்றுவிடாமல் பார்த்துக்கொள்வோம் என்று அஞ்சுகிற அளவுக்கு அச்சம் வளர்ந்திருக்கிறது, ஆளும் கட்சிக்கு.

அச்சத்தை மறைத்துக்கொள்ள முயலும்போது, தூற்றுகிருர்கள்! தோழர் காமராஜரே 'அரசியல் தெரியுமா இந்த தி. மு. க.வுக்கு' என்கிற அளவுக்குப் போகிருர்.!

கழகத்தின் வளர்ச்சியையும், கொள்கைக்கு கிடைத்து வரும் செல்வாக்கையும் காணும்போது 'கனம்'களுக்கும், ஆளும் கட்சியின் தயவால் 'கனம்' குறையாமல் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமெனக் கருதுவோருக்கும், பரதவிப்பும் பதட்டமும் ஏற்படவே செய்கிறது. அதைக் கண்டு ஆத்திரமோ, எரிச்சலோ, கொள்ளும் கட்டத்திலில்லை தி. மு. க! ஏனெனில், இவர்களுக்கும் சேர்த்துத்தான் "வாழ்வுபெற" நாம் போராடிக்கொண்டிருக்கிருேம்!!

நமது கவனமும் ஊக்கமும் எப்படிப்பட்டதென்பதை மாநாட்டின் தீர்மானங்களை உணர்வோர் அறியலாம். உடனே கிளம்பு! வெட்டு!குத்து! வீட்டுக்குத்தீவை!—என்று இப்படி ஒரு எழுத்தும் காணமுடியாது, நமது தீர்மானங்களில். மக்களின் தேவைகளைத் திரட்டித் தருகிருேம் — தேவைகளைப் போக்கிக் குறையில்லாமல் செய்யும் திட்டம் விரும்புகிருேம்—அப்படி ஒரு திட்டம் வகுத்தளிக்க மனமில்லாத டில்லியைக் காட்டுகிருேம்—அந்த டில்லியின் தொடர்பு அறுந்தால் என்னதான் நேரிட்டுவிடும் என்று வினவுகிருேம் — திராவிட நாடு திராவிடருக்கே என்று முழக்கமிடுகிருேம். நாம் தருகிற அளவுக்கு அரசியல் விளக்கம், பொருளாதார விபரம், எந்த மந்திரியும் சொன்னதில்லை! எனினும், காமராசர் "அரசியல் தெரியுமா" என்று கேட்கிருர், கம்யூனிஸ்டுகளைப்போல, பலாத்கார வாதிகள் எனவும் பேசுகிருர்! கேட்டுக்கொள்ளுகிருேம் — வற்புறுத்துகிருேம், என்று தீர்மானங்கள் போடும், நாம் பலாத்கார வாதிகளாம்!!

காங்கிரசுக்கு மட்டுமல்ல, அகில இந்திய ஐக்கியம் பேசும் கட்சிகளுக்கெல்லாமே, நமது வளர்ச்சி ஒரு புதிராக உள்ளது; உடனே எரிச்சல் வருகிறது; சரியான பதிலளிக்க இயலாததால், எரிச்சல், ஆத்திரமாகி, ஏதேதோ பேசவும் எழுதவும் ஆரம்பிக்கிருர்கள். அவர்கள் மீது, அதற்காக நாம் ஆத்திரம் கொள்வதோ, அன்பு நெறியை மீறுவதோ சிறிதும் தகாது; கூடாது. ஏனெனில், நாம் பெறப்போகும் இன்பத் திராவிடம், அவர்களுக்கும் தான்! 'திராவிடம்' வந்ததும் அவர்களையெல்லாம் நிச்சயம் நாம், விரட்டிவிடமாட்டோம்! எனவே மாற்றுக் கட்சிகள், நம்மை ஏசவும் பேசவும் முயலும்போது, ஏற்படும் நெஞ்சக் குமுறலின் விளைவாக ஒவ்வொரு கழகத் தோழரும் சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் ஒரு பத்து ஊரில் எமது கழகங்களைத் துவக்குவேன்—எங்கெங்கு எங்கள் ஏடுகள் போகவில்லையோ அங்கெல்லாம் போகச் செய்வேன்—இன்னும் ஒரு நூறு பேரை, அடுத்த கூட்டத்துக்குள் உறுப்பினராக்குவேன் என்று.

கடந்த பொதுத்தேர்தலின் போது, கோவை, நமக்குரிய பங்கைச் செலுத்தவில்லை! காரணம், பணபலத்தோடு, மோத இயலாமற் போனது எனலாம். எனினும், அந்தப் பணபலத்தையும் புறமுதுகிட்டோடும்படி செய்யும் வலிவும் ஆற்றலும் ஏற்படவேண்டும். மாநாட்டினை, இவ்வளவு பாங்கோடு நடாத்திய மாவட்டத் தோழர்கள், தொடர்ந்து பணியாற்றிடின், இயலாத காரியமா, என்ன! நிச்சயம் முடியும்!! பணியாற்றும், 'மதி'யும் ஆர்வமெனும், 'சம்பத்தும்' உண்டே நிரம்ப!!

அப்படியொரு வெற்றியைத் தேடித்தரும் வகையில் கழகங்கள் பணிபுரிதல் வேண்டும். கழகத் தோழர்கள், நெஞ்சிலே, இந்த எண்ணத்தைப் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

எண்ணங்கள் ஆளும் ஜனநாயக காலம் இது! நாட்டின் எண்ணம் முழுவதும்' பிரிவினையை' விரும்புகிறது எனும் ஓர்நிலை மலர்ந்துவிடின், தன்னாலே வரும் புதிய தாயகம்! தண்புனலும், தளிர்க்காவும், மலையும், மாநதிகளும், அவைகளை மிஞ்சக்கூடிய வள்ளல்களும் வாழ்ந்த பழைய தமிழகம் மிளிரும்!!

அதற்கான பணிகளில்' கோபிக்குவந்துசென்ற, கொள்கை வீரர்கள் ஈடுபடவேண்டும் என்று அன்பேர்டு. தெரிவித்துக்கொண்டு, வளர்கதேனுடு, மணம் பரவட்டும் எங்கும், என்று வாழ்த்துகிருேம். வாழ்க, கொள்கை வீரர்கள்! வளர்க ஊர்தோறும் கிளைகள்!!

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

கேட்டாரைத் திகைக்க வைத்தும், கேளாரையும் கவருகின்ற நாகரிகம்; அறிவியல் உலகம் சாதிக்க இயலாதவற்றை எல்லாம், என்றோ சாதித்துக் காட்டிய நாகரிகம்; சீரும் சிறப்பும் பிணைந்துவிட்ட காரணத்தால், என்றுமே அழியாப் புகழ்பெற்றுவிட்ட நாகரிகம்; அதுதான் எம் தாய்த் திருநாட்டுக்கே உரிய 'தலைசிறந்த நாகரிகம்' என்கிருர்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிருேம்! பூரிப்படைகிருேம்!

ஆனல்...ஆனல்...?

இன்று எம் அன்னை நாடு ஒளியின்றிக் கிடக்கிறது! என் அன்னை வளர்த்த அருங்கலை கேட்பாரற்றுக் கிடக்கிறது! என் அன்னை நாட்டுப் பண்பாடு சீரழிந்து கிடக்கிறது! என் அன்னை மண் பெற்ற நாகரிகம் மாசு படிந்து கிடக்கிறது என் அன்னைத் திரு நாட்டின் மக்கள் வாழ்க்கைத் தரங்குன்றி வாடிக் கிடக்கிருர்கள்!

ஏன்......?

எம் நாட்டை எம் நாட்டவர் ஆளவில்லை; என் இனத்தை என் இனத்தவர் ஆளவில்லை! ஐயோ! இதையும் கேட்கிருேம்! வேதனை விலாவைத் துளைக்கிறது, வெட்கம்தான் வருகிறது.

★

# தண்டனை

—[புலவர் பொன்னிவளவன்]—

உள்ளத்தைச் சிலிர்க்கவைக்கும் நினைவு, உடலைக் குளிர வைக்கும் தென்றல், பக்கத்துணை என்ற பெயரிலோ துக்கவிசாரணை என்ற பெயரிலோ எல்லையில்லாமல் பேசிப் பொறுமையைச் சோதிப்பவர்களின் தொல்லையில்லாத தனிமை, ஆயிரமாயிரம் 'மெர்க்குரி லைட்'டுகளாலும் விரட்டியடிக்க முடியாத இருட்டு, வானத்தில் எண்ணெய் இல்லை; திரி இல்லை; ஒளிமட்டும் தென்பட்டது. ஆமாம் சுடர் நிலவு தன்னுடைய கடமைக்குத் 'தொடக்கவிழா'ச் செய்து கொண்டிருந்தது.

'நெஞ்சமே! உலகத்திலேயே யாருக்கும்—எந்தப் பொருளுக்கும் இல்லாத சுறுசுறுப்பு உனக்கு எப்படி வந்தது? கொஞ்ச நேரம் சும்மா இருக்கமாட்டாயா?' அவள் நெஞ்சைக் கெஞ்சிப்பார்த்தாள்; கொஞ்சிப் பார்த்தாள். ஆனால் அது அஞ்சி அடங்கி ஒடுங்குவதாக இல்லை. என்னதான் அப்படிச் சிந்தனையோ?

வேதனை விழிகளிலே நிழலாட்டம் போட்டது. விழிகள் வேதனையைக் கண்ணீராக வெளியேற்றிக் கொண்டிருந்தன. அவனால் படிக்கப் படாத கதையாகப்—பார்க்கப் படாத படமாக-சூடப்படாத பூவாகச்—சுவைக்கப்படாத கனியாக அவளுடைய அழகு இருக்கிறதே! என்றுதான் அவளுக்குக் கவலை. 'சொந்த வீட்டுச் சாப்பாட்டுக்கு வெற்றிலை பாக்கு வைத்தா அழைப்பார்கள்? நான் அவருக்குச் சொந்த வீட்டுச் சாப்பாடு தானே? என்னிடத்திலே அவருக்கு என்ன உரிமையில்லை? அத்தை மகளே! என் ஆசைக் கிளியே! அருகில் வா! என்று அன்பொழுக என்னை அழைத்தால் நான துள்ளித் துள்ளி ஓடுவேன். பழத்தோப்பு பழுத்திருப்பது நமக்காகத்தான் என்று வௌவாலுக்குத் தெரிய வேண்டாமா?'

அவள் மூக்கிலிருந்து பெருமூச்சு என்ற பெயரில் அனற்காற்று வெளிப்பட்டது. அவளுடைய கண்கள் கன்னம் குளிபபதற்கு வெந்நீர் வைத்துக் கொடுத்தன. வானத்து நிலவு அவளைப் பார்த்துச் சிரித்தது. அவள் நிலவைப் பார்த்துச் சிரித்தாள். அதைப் போல அவளுடைய அத்தான் அவளைப் மார்த்துச் சிரித்தால்...? 'நடக்காததையெல்லாம் நினைத்தால்......? எது நடக்காது? ஏன் நடக்காது? நாளைக்கே நடக்கிறதா இல்லையா? என்று பார்த்துவிடுகிறேனே!'

மீண்டும் அவள் நிலவைப் பார்த்தாள். எவனாவது ஒரு ஆண் கூர்ந்து பார்த்தால் எங்காவது ஓடி ஒளிந்து கொள்ளலாமா? என்று தோன்றுகிறதல்லவா பெண்ணுக்கு? அந்த மாதிரி நிலவும் நினைத்ததோ என்னவோ, மேகத்தை இழுத்துத் தன் தேகத்தைப் போர்த்திக்கொண்டது.

நிலவை நோக்கி அவள் பறந்தாள். நிலவின் காதோடு காதாக அவள் சொன்னாள். "நி தேய்வதற்குக் காரணம எனக்குத் தெரியும்! என்னைப்போல இரவு முழுதும் கண்விழித்தால் உடம்பு தேயாமல் என்ன செய்யும்? நான் ஏன் தெரியுமா தேய்கிறேன்? எனக்குத் தெரிகிறது. ஆனால் தெரியவேண்டியவருக்குத் தெரியவில்லையே!"

'நானாவது பகலிலே தூங்குகிறேன. நீ அதுகூட இல்லையே!' அந்த ஊமை நிலவு பேசமுடியாமல் தத்தளித்தது. படுக்கையிலிருந்து அவள் துள்ளி எழுந்தாள். அவளுடைய கைவளையல்கள் அவளைக் கிண்டல் செய்து கலகலவென்று சிரித்தன. அவள் 'ஸ்விட்ச்'சைப்போட்டாள். அறை எங்கும் ஒளி பரவியது. சுவரிலே மாட்டியிருந்த 'காலண்டரை'ப் பார்த்தாள். அங்கே அவளுடைய அத்தான் அவளைப் பார்த்துப் புன்னகை பூத்தான். 'யார்? அத்தானா?' அவள் கண்களைக் கசக்கி விட்டுப் பார்த்தாள். அந்தக் காலண்டரில் யாரோ ஒரு சினிமா நடிகன்..? சீ! விழித்துக்கொண்டே கனவு காண்கிற வித்தை காதலர்களுக்கு எங்கிருந்து வருகிறதோ?

உள்ளம் ஒரு உருவம் பெற்று அவளெதிரிலே தவழ்ந்து வந்தால் ஒரு 'சாக்லட்'டை அதன் வாயில் திணித்து அதை அவள் சமாதானப் படுத்தியிருப்பாள். ஆனால் உருவில்லாத அந்த உள்ளம் இடைவிடாமல் அவளை நச்சரித்துக் கொண்டேயிருந்தது. விளக்கை அணைத்துவிட்டுச் சோர்ந்துபோய் படுக்கையில் விழுந்தாள். தூக்கம் அவளையறியாமல் ஆட்கொண்டது.

*

பொழுது புலர்ந்தது. பொன் உருகிக்கொண்டிருந்தது வானத்தின் கீழ்த்திசையில். மொட்டுகள் மலர்ந்தன. சிட்டுகள் பறந்தன. கையில் வளைகுலுங்கக் கண்ணில் சிரிப்பெழும்பத் தாமரைப் பொய்கையை நோக்கித் தண்ணீர் தூக்கிச், சின்ன இடையசைய, அன்ன நடை நடந்து கொண்டிருந்தன சிங்காரப் பொற்சிலைகள். மீனாவும் அந்த அணிவகுத்துச் செல்லும் பெண்களின் பெரும்படையில் ஒருத்தியாக நடந்துகொண்டிருந்தாள். அவளுடைய உள்ளம் பழைய நிகழ்ச்சிகளைக் கனவுகளாக மாற்றி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

அவளுக்கு ஒரு அக்கா. அவள் தான செந்தாமரை. யாரோ ஒரு பணக்காரப் பூனைக்கு அந்தக் கொஞ்சுங்கிளியைக் கொடுத்து விடத் திட்டமிட்டார் அவளுடைய தந்தை. ஆனால் அந்தக் கத்துங் கிளியோ தன்னுடைய அத்தான் டாக்டர். சேகரின் தோளில் தொத்துங் கிளியாக மாறத்தான் ஆசைப்பட்டது. அப்பொழுதுதான படிப்பை முடித்து விட்டுத் தொழிலைத் தொடங்கியிருந்தான் சேகர். 'கையிலே காசில்லாதவனுக்கு உன்னை நான் கொடுபபதா? முடியாது' என்றார் தந்தை. இரண்டு வாரங்களுக்குப் பிறகு செந்தாமரையை வீட்டில் காணவில்லை. அவள் கடலில் விழுந்து இறந்திருக்கவேண்டும் என்று வீட்டிலே இருப்பவர்கள் பேசிக்கொண்டார்கள். அவ்வளவு தான்தெரியும் மீனாவிற்கு. அதன்

பிறகு அவளுடைய அத்தான் அவர்கள் வீட்டிற்கு வருவான்; போவான். அந்த நேரங்களிலெல்லாம் "மீனா உனக்குத்தான்" என்று சொல்லத் தவறுவதில்லை அவளுடைய தந்தை.

'இருந்தாலும், இந்த அத்தான் ஏன்தான் என்னிடம் வாய்திறக்காமலிருக்கிறாரோ?' அவள் நடந்து செல்லும் பாதையிலே ஒரு அழகான மாடிவீடு. அந்த வீட்டின வாசலில் டாக்டர் சேகர், M.B.B.S. என்ற பொன்னெழுத்துக்கள மின்னும். அந்த வீட்டுக்கெதிரில் வந்ததும் அவள் தலைநிமிர்ந்தாள். தூரிகையும் கையுமாக அவளுடைய அத்தான் நின்றுகொண்டிருந்தான். "என்ன மீனா? எங்கே? குளத்துக்கா?" இப்படிஒருகேள்வி கேட்டால் என்ன? முத்தா உதிர்ந்து போகும்?

மீனா இலேசாகச் சிரித்தாள். அவன் தலைகுனிந்துகொண்டான். 'இதெல்லாம் என்ன சோதனையோ?' அவள் நெஞ்சம் வேதனையின் விளிம்பைத் தொட்டது. கால்கள் விரைந்தன. குளத்தை அடைந்தாள். குளித்து முடித்துக் கரையேறிய நேரம் அவள் காதிலே மோதியவார்த்தைகள்...?

"என்ன இருந்தாலும் பணம் படிப்புக்குத் தகுந்தாப்போலப் பழக்கம இருக்கவேணும்? டாக்டர் சேகர் எங்கே? அந்தக் குறத்தி எங்கே? என்னமோ டாக்டர் நல்ல மனுசன்தான். இந்த விவகாரத்திலே எல்லாம் நல்ல மனுசன் கெட்ட மனுசன் என்று பார்க்க முடியாது!"

யார்? குறத்தியா? எந்தக் குறத்தி? ஓகோ! ஊர்க்கோடியில் ஆலமரத்தடியில் இருக்கிறதே குடிசை? அங்கேயா? ஐயோ! அத்தான்! அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள், வீடு அருகிலேயே வந்துவிட்டது போலத் தோன்றிற்று அவளுக்கு. அவ்வளவு வேகம் நடையில்.

*

அந்தி நேரம் வந்தது. பட்டாடை உடுத்திப் பால்நிலவு முகத்தில் 'பௌடர்' பூசி மல்லிகை சூடி மஞ்சள் வெயிலில் பூங்கா நடப்பதுபோல மீனா நடந்தாள் அத்தான வீட்டை நோக்கி.

'அத்தான்! அத்தான்!'

'யாரது?'

"நான்தான்! மீனா!"

'உள்ளே வா!"

'என்ன சங்கதி?'

'உடம்பு சௌகரியமில்லை'

'என்ன உடம்புக்கு?'

'அது உங்களுக்கல்லவா தெரியும்?'

டாக்டர் நோயாளியை நன்றாகச் சோதித்துப்பார்த்தார்.

'நன்றாகத்தானே இருக்கிறாய்?'

'இப்பொழுதாவது நான் நன்றாக இருப்பது உங்களுக்குத் தெரிந்ததே!'

'அதுசரி! உனக்கு என்ன செய்கிறது?'

'இரவெல்லாம் தூக்கம் வர மாட்டேன் என்கிறது. ஒரே கனவுகள். எனக்கு வந்திருப்பது காதல் ஜுரம் அத்தான்! காதல் ஜுரம்! அதற்கு மருந்து...'

'அதற்கு மருந்து என்னிடமில்லையே! அதைத்தான் வேறொருத்திக்கு முன்பே கொடுத்துவிட்டேனே"

'யாருக்கு? அந்தக்குறத்திக்கா?'

'ஆமாம்! உன்னுடைய அக்காவிற்குத்தான்!'

'யார்? அந்தக் குறத்தியா என்னுடைய அக்கா? அக்கா இறந்து எத்தனையோ வருடங்களாகி விட்டனவே அத்தான்?'

'இல்லை மீனா! அவள் சாகவில்லை. உயிரோடிருக்கிறாள்.'

'எங்கே? உங்களுடைய நெஞ்சிலா? உங்களுக்குப் பைத்தியமா அத்தான்'

'சரி! மீனா! எனக்கு வேலை நிறைய இருக்கிறது. என்னை நீ பைத்தியமாக்காமல் நகர்ந்தால் நலமாக இருக்கும்.'

'போய் வருகிறேன் அத்தான்!'

செத்துப்போன காதலுக்காக அவள் அழுதாள். அதைச் சவ அடக்கம் செய்வதற்கு நெஞ்சிலேயே ஒரு புதைகுழி தோண்ட முடியுமா என்ன? புண்ணான நெஞ்சில் ஒரு புதைக்குழியா?

*

நாட்கள் பறந்தன. அழுது அழுது கண்கள் சிவந்தன. எண்ணி எண்ணி இதயம் நொந்தது. அவள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். அந்த முடிவு...? அவள் எத்தனையோ முறை அப்பா வைத்திருக்கும் பிச்சுவாக் கத்தியைப்பயத்தோடுபார்த்திருக்கிறாள். அதைப் பயன்படுத்தும் நோக்கத்தோடு இப்பொழுது பார்த்தாள்.

நடுநிசி, நல்ல நிலவு, கையில் பிச்சுவாக் கத்தியோடு ஓசையிடாமல் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். "என்னுடைய காதலுக்கு எதிராக ஒருத்தியா? குத்திக் கொன்றுவிட்டு மறுவேலை பார்க்கிறேன்" அவளுடைய உள்ளம் உறுமியது. ஆலமரத்தடிக் குடிசைக்கு வந்தாள். கதவு திறந்தே இருந்தது.

அங்கே எரிந்துகொண்டிருந்த விடிவிளக்கின் மங்கலான ஒளியில் இரண்டு உருவங்கள் தென்பட்டன. ஒன்று அவளுடைய அத்தான் சேகர். மற்றொன்று...?

விளக்கு வெளிச்சத்தைப் பெரிதாக்கினாள். படுத்துக் கிடந்தவளுடைய கூந்தலை அவளுடைய கை பற்றியது. "ஐயோ! அத்தான்" என்று அலறிக்கொண்டே மீனா அவளுடை முகத்தை உற்று நோக்கினாள்.

"யார்? அக்காவா? நீ உயிரோடு இருக்கிறாயா?" அவளுடைய குரல் தழுதழுத்தது. கை நடுங்கியது. கண்கள் நீர் பொழிந்தன.

செந்தாமரை பேசினாள். "மீனா! ஏன் தயக்கம்? உனக்கு அத்தான் தானே வேண்டும்? என்னைக் கொன்றுவிடு! அத்தானோடு வாழ்க்கை நடத்து." அவள் அமைதியாகச் சொன்ன வார்த்தைகள் மீனாவின் பாதி உயிருக்கு உலைவைத்தன.

"இப்படியெல்லாம் பசப்பினால் உன்னைக் கொல்லாமல் விட்டுவிடுவேன் என்று நினைத்தாயா?"

மீனா கையை ஓங்கினாள். செந்தாமரை கண்களை மூடிக்கொண்டாள். மூடிக்கொண்ட கண்களை அவள் திறந்த பொழுது மீனா இரத்த வெள்ளத்தில் மிதந்தாள்.

"மீனா! மீனா!" இரண்டு குரல்கள் சேர்ந்து அலறின, மீனாவின் வாய் முணுமுணுத்தது. "அக்கா! அத்தான்! உங்கள் வாழ்க்கையைக் கெடுக்க இருந்த எனக்கு நானே கொடுத்துக்கொண்டன தண்டனை இது! ஆமாம் தண்டனை தான்! சரியான தண்டனை!" அவள் தலை சாய்ந்தது.

நான்கு கண்கள் அவளுடைய உடம்பைப் போட்டி போட்டுக் குளிப்பாட்டின. ★

# லெபனான்

மேற்கு ஆசியா அல்லது மத்திய கிழக்கு என்று கூறப்படும் வல்லரசுகளின் சதுரங்கப் பலகையில் உருளும் இன்றைய பகடை லெபனான். வல்லரசுகளின் எண்ணெய்த் தேவைக்காக இன்று உருட்டப்படுகிறது லெபனான்.

அன்று, பண்டைக் காலத்திலே மேற்கு ஆசியாவில் தோன்றிய அத்தனை சாம்ராச்சியங்களினதும் வேட்டைக்களமாக இருந்தது லெபனான். எகிப்திய, அஸீரிய, பாரசீக, செலுக்கீதிய சாம்ராச்சியங்கள் எல்லாம் சின்னஞ்சிறு லெபனானின் வனச் செல்வத்தைப் போட்டிபோட்டு வாரிச் சுருட்டின. உரோமர் லெபனானில் இரும்பு, செம்பு முதலிய உலோகச் சுரங்கங்களைத் தோண்டினர்.

ஆயினும் காலப் போக்கிலே லெபனானது இயற்கை அமைப்பு வென்றது. மலைகள் மிகுந்துள்ள பிரதேசமான லெபனானுக்குள் மக்கள் ஓரளவு சுதந்திரமாகத் தனித் தன்மைகளுடன் வாழும் நிலைமை ஏற்பட்டது. இதிலிருந்து லெபனான் தனித்தவொரு வரலாற்றையும் பெறலாயிற்று. ஏறத்தாழக் கிறிஸ்துவிற்குப் பின் 9-ம் நூற்றாண்டுவரை லெபனானில் கிறிஸ்துவப் பண்புகள் தலைதூக்கி நின்றன. மெல்ல மெல்ல இஸ்லாமும், அராபிய மொழியும் லெபனானில் நிலைக்கலாயிற்று.

பதினாறும் நூற்றாண்டில் லெபனான் உதுமானிய சாம்ராச்சியத்திற்குள் வந்தது. பல வழிகளில் இக்காலத்தில் அரசியல் சமுதாய பொருளாதார மாற்றங்களும் நிகழ்ந்தேறின.

முதலாவது உலகப்போரில் துருக்கி குதித்தபோது லெபனானும் மாற்றத்துக்குள்ளாகியது. 1918-ல் பிரிட்டிஷ் பிரெஞ்சுப் படைகள் லெபனான் கடற்கரைப் பிரதேசங்களைக் கைப்பற்றின. 1920ல் பிரெஞ்சு அரசாங்கம் 'மகா லெபனான்' என ஒன்றைத் தாபித்தது. 1920—36 வரை லெபனான் அமைதியாக முன்னேறிக் கொண்டு வந்தது. 1926-ல் புதிய ஒரு அரசியல் திட்டம் வகுக்கப்பட்டது. ஆயினும் அது நடைமுறைக்கு ஏற்றதாக அமையவில்லை. அதிலிருந்து ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்டது.

1935-ம் ஆண்டளவிலேயே சிரியாவில் தேசிய எழுச்சியும், விழிப்பும் மலரத் தொடங்கியது. ஆயினும் லெபனான் தேசிய எழுச்சியில் உற்சாகத்துடன் பங்குபற்றவில்லை. 1937-ல் புதியதொரு அரசியல்திட்டம்; அதைத் தொடர்ந்து இரண்டாவது உலகப் போர், 1941-ல் பிரான்சு லெபனானுக்குச் சுதந்திரம் வழங்கியது.

> சின்னஞ் சிறு நாடு லெபனான்! உலகப் படத்தைத் துருவித் துருவிப் பார்த்தால்தான், இந்நாட்டைக் கண்டுபிடிக்க முடியும். ஒரு பக்கம் மத்திய தரைத் கடல், இன்னொரு பக்கம் இஸ்ரேல் நாடு, வேறொரு பக்கம் சிரியா தேசம்தான் இதன் எல்லைகள். இந்நாடு இன்று ஒரு போர்க்களமாக விளங்குகிறது. இதனைப்பற்றிய சில தகவல்கள்.

1946-ம் ஆண்டளவிலிருந்தே லெபனான் தனது அண்டை நாடான சிரியாவின் போக்கிற்கு முரணாக இருந்து அதைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கிற்று 1950-ல் லெபனான் சிரியா ஆகிய இரண்டினுக்கும் பொருளாதார நிதி இணைப்பு வேண்டும் என்று சிரியா கோரியது, லெபனான் மறுத்தது.

அண்மையில் லெபனானில் அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரித்தது. ஈராக், சவூதி அரேபியா நாடுகளின் எண்ணெய்க் குழாய்கள் லெபனானுக்கூடாகச் செல்கின்றன. இது பெரும் பண வருவாயைக் கொடுக்கிறது.

1952-ல் லெபனானில் பலத்த உள்நாட்டு அரசியல் குழப்பம் ஏற்பட்டது. இதன் விளைவாக சாமுகன் ஜனாதிபதியானார்.

1955-ம் வருடம் ஏப்ரல் மாதம் நடந்த பாந்தூங் மாநாட்டில் லெபனான் பிரதிநிதிகள் கம்யூனிசத்தை வன்மையாகத் தாம் எதிர்ப்பதை வெளியிட்டனர். அதிலிருந்து சோவியத் வட்டாரத்துடன் உறவு சுமுகமாக இருந்தாலும் அந்நியோன்னியமாக இல்லை.

*

லெபனான், மத்திய கிழக்கில் சிறிய தேசம். நிலப்பரப்பு 4,015-சதுர மைல். ஜனத்தொகை 14-இலட்சம். கிறிஸ்தவரும் முஸ்லீம்களும் ஏறத்தாழச் சம அளவினர். இஸ்ரேலில் இருந்து வந்த அகதிகள் லெபனானில் ஆயிரக்கணக்கில். 1947-ல் ஜனத்தொகை 11-இலட்சம், 1955-ல் 14-இலட்சம்.

இந்த லெபனானிலேதான் இன்று உள்நாட்டு யுத்தம் தீவிரமாக, சாவதானமாக நடக்கிறது. இவ்வாண்டு செப்டம்பர் மாதத்தில் அங்கு பொதுத் தேர்தல் நடக்க இருந்தது. மீண்டும் ஜனாதிபதியாகப் போட்டியிட விரும்பிய சாமுவன் அரசியல் சட்டத்தை மாற்ற முற்பட்டார்; மூண்டது கலகம். ஜனாதிபதியும் சகாக்களும் இராஜினாமாச் செய்ய வேண்டும என்பது கலகக்காரர் கோரிக்கை. சாமுவன் அதற்குத் தயாரில்லை.

இதுதான் உள்நாட்டு விவகாரம். ஆயினும் இதற்குள் மத்திய கிழக்கில் அரபு தேசியத்திற்கும் மேனாட்டுச் செல்வாக்கிற்கும் மோதல்; நிலப்பிரபுத்துவத்திற்கும் மத்தியதர வர்க்கத்திற்கும் மோதல்; பழமைக்கும் புதுமைக்கும் மோதல். இந்த மோதல்களுக்கு எல்லாம் சிகரம் வைத்துள்ள வல்லரசுகள் மோதல் இருக்கிறது. அந்த மோதல் சதுரங்கப் பலகையில் லெபனான் இன்று ஒரு பகடை.

★

# சாதிக் கொடுமை அகல!

—[ 'வண்டு' ]—

சென்னை மேரிஇராணியார் கல்லூரியில் சென்ற 12-ந் தேதியன்று, உலக சகோதர இயக்கத்தின் சார்பில், நடைபெற்ற "கருத்து அரங்கத்தில், பலர் கலந்து கொண்டனர். நிதி அமைச்சர் சுப்ரமணியமும், நீதித் தலைவர் வி. பி. இராசமன்னாரும், திருமதி ரேணுகாமுகர்ஜியும், திருமதி அடெல்தா சீதாதேவியும், அப்துல்மஜித்தும், சி. என். ஏ.யும் அந்த அரங்கத்தில் கலந்துகொண்டு, கருத்துரை தந்தனர்.

சாதி ஒழிப்பு என்பது சுயமரியாதை இயக்கத்தினர் பேசிடுகின்ற ஒரு பேச்சு என்றிருந்த ஒரு நிலை மாறி, அதன் தீமைகளை, சமூகத்தின் பலசாராரும் உணர்ந்திடும் ஒரு கட்டம் முகிழ்க்கத் துவங்கியிருக்கிறது என்பதை, அந்த அரங்கம்காட்டிற்று. அமைச்சர் சுப்ரமணியனாரும், தலைமை நீதிபதி இராசமன்னாரும், அன்று வெளிப்படையாகவே பேசினர். அமைச்சரைவிட, நீதிபதியவர்கள், நெஞ்சத்தைக் கொஞ்சம் அதிகமாகவே திறந்து பேசினார்.

சாதிக் கொடுமைகள் நமது சமூகத்தில் விளைவித்துவரும் இன்னல்களையும் துயரங்களையும் அறியாதோர் இருக்க முடியாது! அறிந்தும், "பழைய முறைகளை மாற்றுவதா?" என்று பயப்படும் பத்தாம்பசலிகள் வேண்டுமானால், இருக்கலாமே ஒழிய; "சாதியின் கொடுமைகளை!" உணராத எந்த மனிதனும் இந்த நூற்றாண்டில், நிச்சயம் இருக்க இயலாது!! மேல் தட்டிலிருக்கும் அய்யர் அய்யங்கார்களும்சரி, கீழ்ப்பட்டவர்களெனக் கருதப்படும் பள்ளு, பறையர்களும் சரி, எவரும் இன்று சாதிக்கொடுமைகள் பற்றிப் பேசாமலிருப்பதில்லை. மயிலையும் மாம்பலமும் வேண்டுமானால், பேசிவிட்டு, வீட்டுக்குச் சென்றதும் பழைய பாதையிலேயே போக நினைக்குமே ஒழிய, பலர் நிச்சயம் இக்கொடுமைக்கு ஒரு பரிகாரம் காண வேண்டியது, அவசியம் என்றே நினைக்கின்றனர்.

அந்த ஆர்வம், அமைச்சரின் பேச்சில் தென்பட்டது! தலைமை நீதிபதி அவர்கள், "சாதியை ஒரு இடத்தில் மட்டும் நீக்கிவிட்டால் போதாது, எல்லாக் கட்டத்திலும் அறவே நீக்க வேண்டுமென்றார்" சாதியை ஒழிப்பது என்று, பார்ப்பனர்களை மட்டும் வெளியேற்றுவதாலோ, அவர்களை மட்டும் தொல்லைப்படுத்துவதாலோ, முடிகிற காரியமல்ல என்றார் அவர்— சாதிக் கொடுமைக்கு ஒரு சின்னமாக அவர்கள் இருக்கலாம், தங்களை உயர்த்திக்கொள்ள அவர்தம் முன்னோர் உருவாக்கிய முறையாக இருக்கலாம், அதற்காக இப்போதுள்ள பார்ப்பனர்களை விரட்டுவதால் என்ன இலாபம் பெறமுடியும்? சாதித் திமிர் கொண்டோர், எல்லாச் சாதிகளிலும் தானே உள்ளனர்! அவர்களை எல்லாம் பதம்படுத்தும் ஒரு மாபெரும் காரிய மூலமே, சாதியில்லாச் சமுகத்தை உருவாக்க முடியும் — எனும், கருத்தைத் தெரிவித்தார், இராசமன்னார். சிந்திப்போருக்கு, இக்கருத்தின் சிறப்பு விளங்கும்.

காங்கிரஸ்—கம்யூனிஸ்டு—திராவிட கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம்-சோசியலிஸ்டு—எதானாலும் சாதி வேண்டும் என்று சொல்லுவதில்லை! இந்துமகாசபை ஒன்றைத் தவிர, அநேகமாக எல்லாக் கட்சிகளும், சாதி ஒழிய வேண்டும் என்றுதான் சொல்லுகின்றன!! அப்படிச் சொல்லுகிற கட்சிகளில் எதெது சொன்னதைச் செயலாக்குகிறது, எதெது சொல்லிவிட்டுப் போய்விடுகிறது, என்பது வேண்டுமானால் குறித்துப் பார்க்கலாமே ஒழிய, "சாதி இருக்கவேண்டும்!" என்று சொல்கிற அரசியல் இயக்கம் எதுவுமில்லை. எனினும் சாதி இருக்கிறது! சாதிக் கண்ணோடு எதையும் அணுகும் ஆசையும் ஒழியவில்லை!!

"தேர்தலுக்கு ஆள் நிறுத்துவதென்றால், இந்த வட்டாரம் முதலியார்களுடையதா? — ஒரு முதலியாரைப் போடு! இது, வன்னியர்கள் அதிகம் நிரம்பியதா? போடு ஒரு வன்னியரை!!— என்கிற சுபாவம், காங்கிரஸ் கட்சியில் இருக்கிறது. நான் ஏன் பிறகட்சிகளைக் குறிப்பிடாமல், காங்கிரசைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், இன்று காங்கிரஸ் தான் பெரிய கட்சி. அதுதான் வழி காட்ட வேண்டும்" என்கிற கருத்தில் பேசினார் உயர்நீதி மன்றத் தலைவர். இதயத்திலிருந்து வந்த வார்த்தைகள் அவை! அமைச்சருக்குக் கொஞ்சம் சங்கடமாயிருந்திருக்கும் — ஆனால், உள்ள நிலைமை அதுதானே!!

தேர்தல் முதல் சாதாரண உத்யோகம் தருவது வரையில் சாதியில்லாமலில்லை. பிற்பட்ட வகுப்பினர்களுக்கு சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்கிற சட்டமிருந்தும்கூட, சாதியின் பேரால் சலுகைபெற விரும்புவோர், தங்கள் விருப்பத்தைச் சமாளித்துக்கொள்ளும் வகையில், இன்றைய அரசு இருக்கிறது என்பதை யாரும் மறுத்திட முடியாது! அப்படிப்பட்ட ஆசையின் காரணமாக, அய்யர் சாதிபோய்-முதலியார் சாதி—முதலியார் போய் ரெட்டியார் — ரெட்டியார் போய் கோனார் — கோனார் போய் நாடார் — என்கிற இந்தச்சூழ்நிலைதான் மலருமே ஒழிய, சாதி ஒழிந்த சமுதாயத்தை இந்தத் தலைமுறையில் நிறுவும் வேலை, நீளும்!

இப்படி நிகழாமல் பார்த்திட வேண்டிய பொறுப்பு, ஆள்வோருக்கும், ஆட்சியை நடாத்திடும் அமைச்சர்களுக்கும்; கட்சிகளுக்கும், கட்சியை நடாத்திடும் தலைவர்களுக்கும் மிகமிக அவசியமாகும். தலைமை

(16-ம் பக்கம் பார்க்க)

## பிறழவில்லை

"....எனவேதான் எந்த இலட்சியத்தில் "திராவிட நாடு திராவிடருக்கே" என்று பாடுபட்டு வந்தோமோ, அந்த இலட்சியத்தினின்றும் இன்று "தமிழ்நாடு தமிழருக்கே" என்று பாடுபட்டு வரும் நாம் — திராவிட கழகத்தினர் ஒரு சிறிதளவும் பிறழவில்லை என்று எடுத்துக் காட்ட விழைகின்றோம்."

5—7—58 "விடுதலை"
'சுதந்திரத் தமிழ்நாடு'
எனும் தலையங்கம்.

# உலக அரங்கில்

இஸ்லாமிய நாடுகளில், இரண்டு மூன்றுண்டுகளாகத் திடீரெனப் புரட்சிகள் முளைத்து வருகின்றன. எகிப்தில் கொட்டமடித்த பரூக் மன்னன் விரட்டப்பட்டதிலிருந்து, மன்னராட்சிகளுக்கு முடிவு தேடவேண்டும் என்கிற ஆர்வம், மத்ய கிழக்குப் பிரதேசத்தில், அதிகமாகியே வருகிறது. இந்தக் கிழமை ஈராக் நாட்டில், மன்னரின் முடியும் பிரதமரின் உயிரும் பறிக்கப்பட்டு, ஆட்சியாசனத்தை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. எங்கே தனது நண்பனுக்கு நேர்ந்தகதி தனக்கும் சம்பவித்துவிடுமோ என்கிற பயத்தில் ஜோர்டான் நாடு கலங்கிக் கொண்டுள்ளதாம்! 60-க்கு மேற்பட்ட இராணுவ அதிகாரிகளை முன்னெச்சரிக்கையாக ஜோர்டானில் கைது செய்திருக்கிருர்கள்!!

*

ஈராக் பிரதமராக நேற்றுவரையில் விளங்கிய நூரிஅல்சேட் என்பாருக்கு இக்கதி வரும் என எவரும் எண்ணவில்லை. மூன்று வாரங்களுக்கு முன்புதான், அவர் இலண்டனிலே ரசமான விவாதங்களில் ஈடுபட்டிருந்தார். 1930-முதல், ஈராக்கின் தலைவிதியை நிர்ணயித்துக் கொண்டிருந்த அவரது வீழ்ச்சி இலண்டன் வட்டாரத்தையே அதிரச் செய்திருக்கிறது. கிட்டத்தட்ட 50-இலட்சம் மக்களைக் கொண்ட ஈராக் நாட்டில், ஆண்டுக்கு 3-கோடி டன்னுக்கு மேற்பட்ட எண்ணெய் கிடைக்கிறது. விரட்டப்பட்டதாகக் கூறப்படும் மன்னர் பெய்சல், 1953-ல் பட்டத்துக்கு வந்தார். ஜோர்டானையும் ஈராக்கையும் ஒன்ருக்கி ஒரு "பெடரேஷனக"ச் செய்தார், அண்மையில். அப்படிச் செய்யப்பட்ட அராபியயூனியனுக்கு முதல் மந்திரியாகவும் ஆனுர்! அப்படிப்பட்டவருக்கேற்பட்ட திடீர் வீழ்ச்சி, உலகத்தையே அதிரச்செய்துள்ளது!!

*

மேற்கு வல்லரசுகள் உண்டாக்கிய பாக்தாத் ஒப்பந்தநாடுகளின் கூட்டம் நடைபெறுவதாக இருந்ததற்கு முதல் நாள் (14-ந்தேதி)தான், இந்தப்புரட்சி நடந்திருக்கிறது. ஈராக்—ஈரான்—பாகிஸ்தான் — துருக்கி முதலிய நான்கு நாடுகளும் கலந்து கொள்ளவிருந்த இக் கூட்டம் ரத்துசெய்யப்பட்டுவிட்டது. இக்கூட்டத்துக்கு வரும் ஈராக் மன்னர் பெய்சலுக்காக, இஸ்தான்புல் நகரில், பிரமாதமான வரவெற்புகள் செய்யப்பட்டிருந்தன! மன்னர் வரவில்லை — இந்தச் செய்திதான் வந்தது!!

*

லெபனனில், தகராறு. இந்நிலையில், ஈராக்கிலும் வீழ்ச்சி. மலைபோல் தாங்கள் நம்பியிருந்ததெல்லாம் சரிவதைக் கண்டு, அமெரிக்காவும் இங்கிலாந்தும் பரபரப்படைந்துள்ளன. இராணுவப் புரட்சி செய்த ஈராக் மக்கள் வீதிகளிலே ஓடியபோது, "வாழ்க நாசர்! விழ்க, ஆதிக்கக்காரர்கள்!!" எனறு முழக்கமிட்டனராம். இதிலிருந்து, எகிப்து நாசருக்கு, அரேபிய நாட்டு மக்களிடம் உள்ள செல்வாக்கு விளங்கும். அரேபிய நாடுகளிலுள்ள முடி மன்னர்களும் அவர்தம் மந்திரிகளும் மேற்கு நாடுகளின் தயவை விரும்புகிறவர்கள்; மக்களோ, நாசரின வீரத்தையும் தீரத்தையும் மெச்சுகிறவர்கள். நாசருக்கு வளர்ந்துவரும் இந்தப்பெருமையைக்கண்டு, வல்லரசுகள், மிரள ஆரமபித்திருக்கின்றன! ஒன்று ஒதுங்கிடவேண்டும்—இன்றேல் பாய்ந்திடவேண்டும். அமெரிக்காவும் பிரிட்டனும் என்ன செய்யப்போகின்றன வென்பதையொட்டியே, உலக அமைதி இருக்கிறது.

* * *

ஜூலை 12-ந் தேதியன்று, தன் வசமிருந்த கப்பற் படையைச்

சிங்கப்பூர் முதலமைச்சர் லிம்யூ-காக், மலேயா முதலமைச்சர் துங்கும் அப்துர்ரஹ்மான், ஆகியோர், "விரைவில், சிங்கப்பூரும் மலேயாவும் ஒரே ஆட்சிக்குள் வந்துவிடும் என்பதற்கான அறிகுறி" என்று குறிப்பிட்டிருக்கின்றனர். இதனுல், தனியாட்சி நடாத்திவரும் சிங்கப்பூர்த்தீவும் மலேயா பெடரேஷனும ஒன்று சேர்ந்து, மிக விரைவில் ஒரு கூட்டாட்சியாகக்கூடும் என்கிற கருத்து வலிவடைந்துள்ளது.

* * *

பிரான்சின் அரசுப் பொறுப்பையேற்ருரல்லவா இராணுவத் தளபதி டிகால்! அரசுக்கு வந்ததும், அவர் என்ன செய்யப் போகிருர், பிரான்சு சர்க்கார்முறையில் என்னென்ன மாறுதல்களைச் செய்யப் போகிருர் என்பது ஒரு இரகசியமாகவேயிருந்து வருகிறது. இந்நிலையில், அமெரிக்க வெளிநாட்டு விவகார அமைச்சரான டல்லஸ், டிகாலை, பாரிசில் இந்தக் கிழமை சந்தித்திருக்கிருர்! அப்போது டிகால் சொன்ருராம், "என் ஆசை, அணுசக்தி ஆயுதங்களைக்கொண்டே ஒரு வல்லரசாகப் பிரான்சை ஆக்க நான் உறுதி கொண்டிருக்கின்றேன்" என்ருராம். இதிலிருந்து, டிகாலின் ஆசை விளங்குகிறது! டிகால், இன்னெரு நெப்போலியனுகும் ஆசையை விடுவார் என்கிற அறிகுறி தென்படவில்லை!

* * *

இந்தக்கிழமையில், இன்னெரு குறிப்பிடத்தக்க "சந்திப்பும்" நடைபெற்றிருக்கிறது. யுகோ தலைவர் டிட்டோவும், எகிப்துத் தலைவர் நாசரும் சந்தித்திருக்கின்றனர். "கெடுபிடிப்போர் தேவையில்லை, அந்நிய ஆதிக்கம் அறவே ஒழியவேண்டும், அணுகுண்டுத் தடை வேண்டும" என்று வலியுறுத்தி இருவரும் கூட்டறிக்கை விடுத்திருக்கின்றனர், யுகோ நாட்டில் சுற்றுப் பயணம் செய்யவிருந்த நாசர், ஒரு நாள் முன்னதாகவே புறப்பட்டுவிட்டார் எகிப்துக்கு! ஈராக் புரட்சியின் விளைவாகத்தான் இப்பயணம் அவசியமாகிவிட்டது என்று கருதப்படுகிறது!!

14-ம் பக்கத் தொடர்ச்சி

நிதிபதியவர்கள் சொன்னதுபோல "சட்டம் ஒன்றினல் மட்டும், இச் சமுகத் தீமையை குழி வெட்டிப் புதைத்துவிட முடியாது. சமுக அமைப்பிலேயே ஒரு புது மாறுதல், ஏற்பட்டாக வேண்டும்" இப் புது மாறுதலை, எப்படிச் செய்யலாம் என்னென்ன விதத்தில் சமுகத்தில் புகுத்தலாம் என்பதை, சகலரும் யோசிக்க வேண்டும்.

அரங்கம் வைப்பதன் மூலமோ, மாநாடு ஒன்று நடாத்திக் கர்ச்சிப்பதன் மூலமோ, இதைச் செய்திட முடியாது! இவை, கருத்துகளைத் திரட்டிடப் பயன்படும், செயலாற்றத்தக்க திட்டம் வேண்டும்!! இந்தத் திட்டங்களை, அமைச்சர் சுப்ரமணியம், ஆளும் கட்சியைக்கொண்டு ஏனைய கட்சிகளையும் கலந்து வகுக்க வேண்டும். நமது ஒத்துழைப்பு, இந்தத் துறையில் எப்போதும் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திட்டம் தீட்டி அறவே சாதியை ஒழித்திடும் நல்ல நாள் மலரும் வரையில், அரசினர் சும்மாயிருத்தலும் ஆகாது. என்னென்ன வகையில் "சாதி" எனும் பெயரை ஒழித்திட வேண்டுமோ, அதையெல்லாம் செய்துகொண்டேயிருக்கவேண்டும். இதைப்பற்றி, கருத்து அரங்கத்தில், சி. என். ஏ. சொன்னுர், "சாதி ஒழிப்பில் நமக்கு இருக்கும் அக்கரையைக் காட்டுமுகத்தான், எங்கெங்கு சாதியின் பெயரால் தெருக்களும் ஊர்களுமுள்ளனவோ அவைகளையெல்லால் சர்க்கார் மாற்றவேண்டும்," என்று. இதனுல், சாதி ஒழிந்துவிடுமா என்று கேட்கலாம்! சாதி ஒழியாது—ஆனுல், அதுபற்றி நாம் கொண்டிருக்கும் தீவிரமும் ஆர்வமும் உலகுக்கு விளங்கும் வகை ஏற்படும்!! சி. என். ஏ. தெரிவித்த இதே யோசனையையே, இரண்டு நாள் கழித்து, அகில இந்திய காங்கிரஸ் பொதுக்காரியதரிசியான சிமந் நாராயண் என்பாரும் வேருெரு இடத்தில் வேருெரு சூழ்நிலையில் பேசுகையில் வெளியிட்டிருக்கிருர். எனவே, நமது அமைச்சர் குழுவுக்கு, அகில இந்திய காங்கிரசின் 'கடிவாளம்' எதுவும் ஏற்படாது என்று நம்ப ஏதுவுண்டாகிறது! எனவே, சாதி ஒழிப்பிலுள்ள சிரத்தையைக்காட்டும் முதல் நடவடிக்கையாக இதைச் செய்வதோடு, சகலரையும் கலந்து நிரந்தரமான பரிகாரம் காண்பதற்கான திட்டங்களையும் தீட்டிட முயல வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்!!

★

# காகித ஆலைகள்!

| | | | |
|---|---|---|---|
| 1. | டாகுர் பேப்பர் மில், 1 | — | டிமாஷுர். |
| 2. | டாகுர் பேப்பர் மில், 2 | — | கங்கிநாரா. |
| 3. | இந்தியா பேப்பர் மில், | — | நைகதி. |
| 4. | பெங்கால் பேப்பர் மில், | — | ராணிகஞ்ச். |
| 5. | பாரத் பேப்பர் மில், | — | லெடோ. |
| 6. | திரிவேணி டிஷ்யூஸ், | — | திரிவேணி. |
| 7. | அப்பர் இந்தியா கூபர் மில், | — | லக்னௌ. |
| 8. | ஸ்டார் பேப்பர் மில், | — | சஹரான்பூர். |
| 9. | கோபால் பேப்பர் மில், | — | அப்துல்லாபூர். |
| 10. | ரோடாஸ் இன்டஸ்டிரிஸ் | — | டேரி ஆன்சோன். |
| 11. | நேஷனல் நியூஸ் பிரிண்ட் | — | நேபா நகர். |
| 12. | பல்லார்பூர் பேப்பர் மில், | — | பல்லாஷா. |
| 13. | குஜராத் பேப்பர் மில், | — | அகமதாபாத். |
| 14. | புதும்ஜி பேப்பர் மில், | — | பம்பாய். |
| 15. | வெஸ்டர்ன் இந்தியா. | — | பம்பாய். |
| 16. | டோராப் பேப்பர் மில், | — | புனு. |
| 17. | டெக்கான் பேப்பர் மில், | — | புனு. |
| 18. | வெஸ்ட் கோல்டு பேப்பர் மில், | — | தண்டேலி. |
| 19. | பிராவிடன்ஸ் பேப்பர் மில், | — | பம்பாய். |
| 20. | ஸ்டாண்டர்ட் பேப்பர் மில், | — | நாசிக். |
| 21. | ஓரியண்ட் பேப்பர் மில், | — | ஒரிசா. |
| 22. | பேப்பர் அண்ட் பல்ப் கன்வர்ஷன், | | பம்பாய். |
| 23. | சிர்பூர் பேப்பர் மில், | — | சிர்பூர். |
| 24. | கன்ட்போர்டு கன்டெய்னர்ஸ், | — | பம்பாய். |
| 25. | நட்லம் ஸ்ட்ராபோர்டு, | — | நட்லம். |
| 26. | அர்விந்த் போர்டு, | — | பில்லிமோரா. |
| 27. | ஸ்ட்ரா ப்ராடெக்ஸ், | — | போபால். |
| 28. | சௌராஷ்டிரா பேப்பர் மில், | — | ராஜ்கோட். |

**இத்தனையும் வடக்கே!**

## தெற்கே

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆந்திரா பேப்பர் மில், | — | ராஜ்மந்திரி. |
| 2. | மைசூர் பேப்பர் மில், | — | பத்ராவதி. |
| 3. | காவேரி பேப்பர் மில், | — | நஞ்சன்கூடு. |
| 4. | காவேரி பேப்பர் மில், | — | மைதூர். |
| 5. | புனலூர் பேப்பர் மில், | — | திருவாங்கூர். |
| 6. | திருவாங்கூர், | — | ரேயான்ஸ். |

28 அங்கே! ஆறே ஆறுதான் இங்கே!! — ஆந்திரத்திலும், கேரளத்திலும், கன்னடத்திலும்கூட ஒன்று இரண்டாவது உள்ளது. தமிழகத்தில், அதுவும் கிடையாது!!

வாழ்வது வடக்கு! தேய்வது தெற்கு!!—என்று சொன்னுல், திட்டுகிருர்களே, அவர்கள் இதற்கு என்ன பதில் சொல்வார்கள்?

காஞ்சீபுரம், [illegible] திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் [illegible] அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.